28

Regd. M. 1803. Vol. III. No. 8.

9 APR 1928
MADRAS

# லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

# பட்டு லேஞ்சுகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை நீலம், சந்தனக் கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 இஞ்சு 1-க்கு ரூ. 10.

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 12 முதல் 14 வரை.

---

# இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப்போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர்:—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 12 முதல் 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களிலிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

---

# வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

## கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

287, சைனுபஜார் ரோட்,

சென்னை.

ஓம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 APR 1926
MADRAS

# லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

பத்திராசிரியர் : க. ச. சுந்தரம் பிள்ளை.

மலர் ௩. | குரோதனவஸ்ரீ பங்குனிமீ 1926 மார்ச்சுமீ | இதழ் ௮.

அட்டவணை.



| | | பக்கம். |
|---|---|---|
| 1. | லக்ஷ்மி துதி ... ... | 371 |
| 2. | நமச்சிவாய வாழ்த்து ... | 372 |
| 3. | மழைச் செழிப்பும் நாகரீகமும் ... | 373 |
| 4. | சிவத்தியானஞ் செய்தவர்கள் எய்திய சித்திகள் | 379 |
| 5. | விஜயா அல்லது 312 ... | 382 |
| 6. | வைதிக தேவதைகள் ... | 385 |
| 7. | பானுபாய் ... ... | 400 |
| 8. | நம்பிக்கை ... ... | 408 |
| 9. | வெண்ணில வின்பம் ... | 413 |
| 10. | கற்பின் மகிமை ... | 418 |

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
40357
சென்னை 600 008

# லக்ஷ்மி

சந்தா விவரம்.

| | | |
|---|---|---|
| உள் நாடுகளுக்கு வருடம் 1-க்கு இந்தியா, பர்மா, சிலோன் | ... | ரூ. 2 0 |
| வெளி நாடுகளுக்கு வருடம் 1-க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ், | | ரூ. 2 8 |

தனிப்பிரதி அணா 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாத முடிவிலும் வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக. பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் சந்தா நம்பருடன் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் கவனிக்கப்பட மாட்டா. மானேஜர்.

## உங்கள் புத்தகசாலை பூர்த்தியாகாது?

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். 800 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3.

தபாற் செலவு வேறு.

சொற்பக் காபிகளே கைவச முள்ளன.

முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

ஓம்.

# லக்ஷ்மி துதி

வியப்பாரு முத் தமிழ்ப் பா வெகுவாக
விளம்பு மென்னை
நயப்பாரி லாமையி னுணு கின்றேன்
துங்கநான் மருப்புக்
கயப் பான்மை யோரு நடுங்குறு மாறு
கனக நல்காய்
செயப் பாவையே திருமா லென்றுமோ
வருஞ் சீரணங்கே.

# நமச்சிவாய வாழ்த்து.

சொல் லவாவிய தொண்டர்தம் மனத்தில் சுதந்தரங் கொடு
[தோன்றிய துணையைக்
கல்லவாவிய ஏழையேன் நெஞ்சுங் கரைந்து வந்திடக் கலந்
[திடுங் களிப்பைச்
செல்லவாவிய பொழிற்றிரு வொற்றித் தேனைத் தில்லைச்
[சிற்றம்பலத்தாடும்
நல்ல வாழ்வினை நான்மறைப் பொருளை நமச்சிவாயத்தை
[நான் மறவேனே.

உம்பர் வான் துயர் ஒழித்தருள் சிவத்தை, உலகெலாம் புகழ்
[உத்தமப் பொருளைத்
தம்பமாய் அகிலாண்டமுந் தாங்கும் சம்புவைச் சிவ தருமத்
[தின் பயனைப்
பம்புசீருள் பொழிதரு முகிலைப் பரமஞானத்தைப் பரமசிற்
[சுகத்தை
நம்பினோர்களை வாழ்விக்கும் நலத்தை நமச்சிவாயத்தை
[நான் மறவேனே.

இராமலிங்கர்.

# மழைச் செழிப்பும் நாகரீகமும்

(B. S. குமாரஸ்வாமிப் பிள்ளை எழுதியது.)

(1) இந்நிலவுலகத்தே ஆறறிவும் பெற்று அவ்வறிவின் பயனாய் நாள்தோறும் பலவாறு விருத்தியுற்று நாமும் நமது சமுதாயமும் முன்னேற்ற மடைவதையே நாகரீகமெனக் கூறலாம். நமது உலகத்தில் ஜனத்தொகை வருடாவருடம் வளர்ந்துவர அதற் குகந்தவாறு ஆகாரமும் ஆகாரம் வர்த்தனை செய்ய வேண்டிய இடமும் வளராது ஒரே நிலையுற் றிருப்பதால் இன்னும் சில நூற் றாண்டுகளுக்குள் ஜனத்திரள் மிகப் பெருகி வேண்டிய அளவு ஆகாரமின்றி, உலகத்தாருக்கு மிகுந்த கஷ்டமும், வறுமையும் ஏற்படும் என்று பிரெஞ்சு தத்துவ சாஸ்திரி மால்த்தூஸ் (Malthus) என்பவர் ஒரு நூற்றாண்டிற்கு முன் கூறியுள்ளார். இதன் பயனாக மேனாட்டில் ஏற்பட்ட துன்பங்களும் சமுதாயத் தீமைகளும் பல வுள. உண்மையாகவே ஜனங்கள் பெருகி வருகின்றார்களாயினும், அவர்களுக்கு வேண்டும் ஆகாரத்தைப் பயிர் செய்து பயன் பெறுவதற் குரிய இடங்கள் இன்னும் உலகத்தில் தாராளமா யுண்டு. அவ்விடங்களெல்லாம் களைத்துப் பயிராகிய பின்னும் 'கருவி' செய்து உணவு தானியங்களைப் பெறுவதற்கு வசதியான இடம் முழுமையும் ஒரு காலத்துப் போதாதெனக் காணப்படினும் வனாந்தரங்களான பாழ் வெளிகள் ஏராளமா யுண்டு; அவைகளையும் செழிப்புள்ள நிலங்களாகத் திருத்தவும், அவைகளினின்றும் ஆகார தானியங்களைப் பயிர் செய்து எடுக்கவும், புதிதான இப்பொழுது கருதுவதற் கியலாத, சாஸ்திரீய முறைகள் ஏற்படலாம். இயற்கையாகவே, அறிவும் நாகரீகமும் வளர்ந்து வருவதால், ஜனசமுதாயத்திற் கேற்படும் எவ்விதத் துன்பங்களையும் நீக்க வல்லமை இயல்பாகவே ஏற்படுமென்பதற்கு ஐயமில்லை.

(2) தற்போது வனாந்தரங்களாய் ஜல சந்ததியே காண முடியாத பாலை வனங்களெல்லாம் வெகு காலத்திற்கு முன், சிறந்த நாகரீகம் பொருந்திய அரசாட்சியினை யுடைத்தாய் முல்லை, மருதம், நெய்தல் நிலங்களா யிருந்தன. இவைக ளெல்லாம் நாளடைவில் பாலையாய் மாறின. பூர்வீக அரசாங்கங்க ளாகிற அஸிரியா, பாபிலோனியா, பாரசிகம், போனிஷ்யா, கிரீஸ், ஈஜிப்து, கார்த்தேஜ், பூர்வீக இந்தியா, சீன இவைகளும் இன்னும் அமெரிக்காவில் இங்காஸ், ஆஸ்டேக்ஸ், முதலியவைகளும் உயர்ந்த ராஜதானிகளா யிருந்து செழிப்புற் றிருந்தன. இரு போகமும் கிருஷி செய்யப்பட்டு நல்ல தானியங்களைக் கொடுத்த அவ்விடங்கள் இப்பொழுதோ மழையின்றி, ஜல சௌகரியமின்றி, ஆட்களோ, வேறுயிர்ப் பிராணிகளோ வசிக்க முடியாத ரீதியில் கொடும் பாழ் வனமாய்க் காண்கின்றோம், இவைகளுக்குக் காரணங்களும் மிக வுண்டு. இராஜ்ஜியங்களெல்லாம் முதனிலை, இடைநிலை, கடைநிலை யென மூன்று சிர்களை யுடைத்தாயிருக்கு மெனவும், படிதாழ்ந்திறங்குவது போல ஒரு நிலையினின்று அடுத்த நிலைக்கும், பின் அதற்கடுத்த நிலைக்கும் இயல்பாய் ஏகுவதாகவே, பூர்வீக தேச சரித்திரங்களி னின்றும் சாஸ்திரங்களி னின்றும் அறிகின்றோம்.

(3) தேசங்களின் தட்ப வெப்ப நிலை.

(i) முதனிலை :—முதலில் மழையின் மிகுதியும் நில வளமையும் பொருந்திய அபிவிருத்தி காலம். அப்பொழுது பருவம் செய்வதற்கு வேண்டும் மழையின் செழிப்பும் இருபோகம் முப்போகம் விளைவெடுக்கத் தகுந்த நிலங்களும் நாற்காலிகள் மேய்ந்து வளர்ந்தோங்கி வர வசதியான மேய்ச்சற் றரைகளும், சுத்த நீர்க்காயல்களும் ஜலப் பெருக்குற்ற இயற்கையான நதிகளும் நீரோடைகளும் நிரம்பக் காணப்படும். தவறாது நிலங்கள் விளைவைக் கொணரும். ஒரு விதத்திலும் ஜலக் கஷ்டமே காணமுடியாது.

(ii) இடைநிலை :—இரண்டாவதாக மழை குறைந்ததும் சில பாகங்களிலேயே பொழிகின்ற மழையைக் கொண்டு பெரும்பாகங்களுக்கு உபயோகிக்கின்ற நீர்ப்பாய்ச்சற் காலம். அப்பொழுது நிலங்கள் பயிராகி விளைவதற்குக்

காடு மேடான நிலங்கள் மிகுந்த வருத்தத்துடன் சம நிரப்பாக்கப்பட்டு, நெடு நீளமான கால்வாய்கள் வழி ஜலம் கொடுக்கவேண்டும். பெரு முயற்சியினுல் பெரிய கால்வாய்கள், கிளைக்கால்கள், கொப்புக்கால் கள் கிளைத்தெடுத்து அவைகளின் வழியாய் ஜலங் கொணர்ந்து நிலங்களுக்குப் பாய்ச்சல் வேண்டும். பருவ மழை யில்லாததுபற்றிப் பெய்கின்ற மழை ஜலத்தைப் பெரிய ஏரிகளிலும் காயல்கள் போன்ற ரிசர் வாயர்களிலும் நிரப்பி வைத்துக்கொள்ள வேண்டும். இவையும் போதாது, நதிகளினின்றும், கிணறுகளி னின்றும், காயல்களினின்றும் சக்கரங்கள், யந்திரங்கள் வழியாய் ஜலத்தை உயர்த்திக்கொண்டு போகவும் வேண்டும். குன்றுகளில் பெய்யும் மழைஜலம் பாழாய்ப் போகாதபடி மலைச்சாரல்களிலும் பெருந் தடாகங்கள் அமைத்தல் வேண்டும். பெரு முயற்சியுடனும் அபரி மிதமான பொருட் செலவுடனும் மேற்கூறிய சௌகரி யங்களும் ஏற்படுத்திய பின்னரும், ஜலக் கஷ்டத்துட னேயே இருப்பார்கள் கிருஷி செய்வோர்கள்; ஜலக் கஷ்டமின்றி, கவலையின்றி இருக்க முடியாது.

(iii) மூன்ருவது பாலைவன நிலை :—அக்காலத்தே மழைகள் பொழியாது குன்றி விடுகின்றன. நதிகளும் கிணறு களும் தடாகங்களும் ஜலமின்றி வரண்டு போகின்றன. விளை நிலங்கள் மழை யின்மையால் பருவத்தே பயிர் செய்யப்படாமல் காடாய்ப் பாழ்படுகின்றன. மழை யும் ஜலமும் வரவரக் குறையவும் தேசம் முழுமையும் பாலை வனமாய்ப் பாழ் நிலமாகின்றன. ஆகவே தேசங் கள் எல்லாம் முதலிரண்டு படியும் கடந்து சென்று மூன்ருவதான பாழுந்தன்மையைக் கடைசியில் எய்து கின்றன.

(iv) இயற்கையாகவே மனிதர் ஜலசௌகரியமுள்ள செழிப் புற்ற நிலங்களுடைய பாகத்தையே முதலில் நாடிச் சென்றடைவார்கள். அவர்கள் இருந்த பாகங்களில் மழை குறைகின்றபொழுது அவ்விடம் விட்டுப்போகாம லிருக்கத் தம்மா லியன்ற முயற்சியுடன் கிடைத்த ஜலத்தைப் பாழ்படுத்தாமலும் அபூர்வமாய்ப் பெய் கின்ற மழை ஜலத்தை வெகு அருமையாய் உபயோகித்

தும் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள். தம்மா லியன்ற அளவு கஷ்டப்பட்டும் அவ்விடத்தில் இனி மேல் ஜீவித்திருக்க முடியாதென்று தனக்குப் படுகின்ற காலத்தில் அந்தப் பாகத்தை விட்டொழித்து மழை வளம் மிகுந்த வேறொரு தேச பாகத்தைத் தேடிச் செல்கின்றனர். பூர்விக இராஜதானிகள் எல்லாம் பின் னிரண்டு நிலையினை யுடைத்தாய் மிகுந்த கஷ்டத்திற் குள்ளாயிருப்பதாய்க் காண்கின்றோம். இனித் தற் கால நாகரீகம் பொருந்திய அரசாங்கங்க ளெல்லாம் முதல் நிலையைப் பொருந்திய செழிப்புற்ற பாகங்களில் தழைத்து வாழ்கின்றன. இவர்களுக்கு பருவத்திற் கேற்ப எராளமான மழையும் செம்மை நிலங்களும் விளை பொருள் வேண்டிய அளவு கொணர்கின்றன. சில பாகங்களுக்கு மட்டுமே நீர்ப்பாய்ச்சல் அவசிய மெனக் காணப்படுகின்றது. மழையின் செழிப்பின்றி நாகரீகத்தின் முன்னிலையில் நிற்க முடியாதென்பது சாஸ்திரீய சரித்திர உண்மை தாராள மழையும் நல்ல விளைவும் இல்லாத அரசாங்கங்கள் தழைத்தோங்கி நிற்ப தெங்ஙனம்?

இஃதுடன் சில பாகங்களில் கிருஷி செய்வதற்கு மார்க்கமில்லாதபடி சாகுபடி செய்து ஜீவித்திருக்க முடியாத விதமாய் உரம் இழந்து மண் கெட்டுப் போயிருக்கின்ற தன்மையையும் காணலாம். இதற்கு அனேகமாய் ஜனங் களைக் குறை கூறுவதுண்டு. ஆனல் ஆராய்ந்து பார்க்கும் பொழுது மழைக் குறைவே முதற் காரணமென நன்கு புலப் படும். செல்வத்திற் பெரிய குபேரனுக் கொப்பான தனவந் தர்கள் அரசு புரிந்த மெஸப்பொட்டோமியா, ஆசியா மைனர் இவைகள் செழிப்பு இழந்து பாழ்படக் காரணம், அக்காலத்திலே அப்பாகங்களில் குடிவாழ்ந்த ஜனங்களின் முயற்சியின்மையே காரண மெனக் கூறுகின்றார் ஒரு சாரார். ஆனல் உண்மை விளங்க, மேற்கூறிய நாடுகள் செல்வத்தையும், செழிப்பையும், உணவையும் உன்னத பதவியையும் மனிதருக்கு அளித்திருக்க, இப்பொழுது அவை முற்றும் இழந்து, ஆகாரமின்றி, வள்மையும் செல்வமு மிழந்து வறுமையுற்றுக் கொடும் பஞ்சம் ஏற்படுவதின் கார ணம் இன்னதென உற்று நோக்குவோமாயின் மழையின்மை

யும் நீர்ப்பாய்ச்சலுக்கு வசதிகள் இன்மையுமே காரணமென நன்கு புலப்படும். மழை குறைந்த நாட்டில் வறுமையுற்று பஞ்சம் மிகுதியுற்று எவ்வளவு நாட்கள்தான் மனிதருக்கு வாழ்வது சாத்திய மாகும்? வேளாண்மை ஒன்றைப் பற்றியே வாழும் குடிகள் எவ்வாறு வாழ்ந்திருக்க முடியும்? வேர்ப்பசைபோன்ற வேளாண்மை யிழந்தால், அரசாங்கங் கள்தான் எவ்வாறு நிலைபெற்றிருக்க முடியும்? வேர் இழந்த நன்மரம்போல, வேளாண்மை தொலைந்த அரசாங்கமும் தழைத்து நிற்பது இயலாத காரியமே.

(5) பூர்வீகத் தலை நகர்கள். ஆபிரிக்காவின் பெரிய வனாந்தரம் சஹாரா என்பதன் தன்மை பிரெஞ்சுக்காரர் பெரு முயற்சியினால் நன்கறியப்பட்டிருக்கிறது. பிஷ்ஷர் (Fisher) என்ற ஒரு பெரியவர் கூஷாட்காயல் தொட்டு டிரிப்போலி (Tripoli) நகரம் வரையும் முயற்சி குன்றாது மனந்தளராது மிகுந்த சங்கடத்துடன் 1100 மைல் கடந்து சென்று, அவ்விடத்துக் கண்டவைகளை எழுதி வெளிப் படுத்தியிருக்கின்றார். ஒட்டகத்தின் மீதேறிச் செல்கின்ற மணற்காட்டில் ஒரு தடத்தின் வழியாகச் சென்றார்போலும், சில விடங்களில் தாகம் மிகுந்து சாகுந்தருவாயிலானேம் எனப் பயந்ததாகக் கூறுகின்றார்; அவர் தங்கிச் சென்று போன ஒவ்வோரிடத்தும் கற்கட்டிடங்களும் கிணறு களும் கோட்டை மதில்களும் கல்லா லமைத்த இராஜ பாதைகளும் காணப்பட்டன. அவைகளெல்லாம் ரோமா புரியின் நாகரீகத்தைப் பொருந்தியிருந்தன. சில விடங் களில் பனியினால் மூடப்பெற்ற 4000, 5000 அடி உயர முள்ள மலைச் சிகரங்களைக் கடந்து சென்றதாகவும், வேறு சில விடங்களில் ஒட்டகத்தின் மீதேறி அனேக மைல்கள் காதங்கள், மணற்றிரளில் மிகுந்த கஷ்டத்துடன் நகர்ந்து சென்றதாகவும், அம்மணற் குவியல்களெல்லாம் பூர்வீக நதிகளின் தடங்களாய்க் காணப்பட்டன வென்னும் கூறு கின்றார். ஜலமிழந்த காயல்களும் எங்கும் மணற் பரப்பிற் கடைசியில் வலைபோன்ற அனேக பள்ளத்தாக்குகளும் இப்பொழுதும் ஜலம் நிரம்பிக் காணப்படும் சிறு தடா கங்களும் அவைகளைச் சூழ்ந்து சில செடிகள் மரங்களும் சில வேலைகளில் குடிசை போன்ற கட்டடங்களும் தங்கி யிருக்க வசதிகளும் காணப்படுகின்றன. இவ்வாறு வசதி

களும், அபூர்வமான கிணறுகளும் செழிப்பற்ற பாகங்களும் இல்லாவிடில் அப்பெரியவர் உயிருடன் வெளி வந்திருக்க மாட்டார்.

ரோமாபுரி அரசாட்சிக் காலத்தில், ஸைரீன், கார்த்தேஜ், நியுமிடியா, மரூஷியானு என்று அனேக மாகாணங்களாய் வகுத்திருந்த வட ஆபிரிக்காவானது அப்பொழுது தானியக் களஞ்சியமாய் இருந்ததாயும், ஒவ்வொரு மாகாணத்திலும் பெருஞ் செல்வம் பொருந்திய நகரங்கள் அனேகம் அமைந்திருந்தன வென்றும் காணப்படுகின்றது. கார்த்தேஜ் என்ற ஒரு மாகாணத்திலுமே 300 செல்வ நகரங்கள் தோன்றியிருந்ததாக கிப்பன் (Gibbon) என்ற சரித்திராசிரியர் கூறுகின்றார். ஆனால் இப்பொழுதோ, எல்லாம் அழிந்தன! எல்லாம் ஒழிந்தன! அப் பூர்வீக நாகரீக முழுமையும் மெலிவுற்று அமிழ்ந்து புகைக்கப்பட்டாற் போல அங்கு மிங்கும் அழிந்த கோட்டை மதில் வாயில்களும், உடைந்து தகர்ந்த அணைக் கட்டிடங்களும், உயர்ந்த மதில்களின் சின்னு பின்னமான சில சிகரங்களும் காணப்படுகின்றன. அவைகளைச் சென்று பார்ப்பவர்களுக்கு, மிகுந்த ஆச்சரியத்தையும், நிலையற்ற சங்கடத்தினையும் தந்து உலகிலே யாதொன்றும் நிலைத்திராதென்ற தத்துவ உண்மையை விளக்கிக் காட்டுகின்றன. இவ்வனந்தரத்தின் மத்தியில் வேறோரிடத்தில் பூர்வீகத்தன்மையுடைய கோட்டையும் சண்டையிடும் அரங்கம் ஒன்றும், அதன் பக்கத்தே அமைத்த இருப்பிடங்களும் அழிவின்றிக் காணப்பட்டன. போரிற் சிறந்து போராடிய ஆண்சிங்கங்கள், அவர்களைப் பார்த்து ஆனந்தங் கொண்டாடிய அரசர்கள், பிரமுகர்கள் வசித்த அவ்வரணில் இப்பொழுதோ பாம்பும் பல்லியும் தேளும் சிலந்தியும் தமக்கே உரியதாய் வாழுகின்றன. மக்கம் (Mecca) என்ற பிரபல்லிய நகரத்திலிருந்து மொராக்கோ வென்ற ஆபிரிக்கா நகரம் வரையும், சூரிய ரேகைகள் மேல் விழாதபடி, அடர்ந்து நெருங்கின மரங்களின் நிழலிலேயே பிரயாணிகள் அக்காலம் நடந்து செல்வது வழக்கமா யிருந்ததென அரேபியர்கள் கூறுகின்றதினுல் அந்நாட்டின் தன்மை எவ்வா றிருந்திருக்கலாம் என யூகித்தறிந்து கொள்ளலாம். அம்மரங்களெல்லாம் மாய்ந்தொழிந்தன; அப்பாதைகள் அனைத்தும் பாழடைந்து தெரியாமற் போயின.

(தொடரும்)

# சிவத்தியானஞ் செய்தவர்கள் எய்திய சித்திகள்

வண்ணைநகர் ஸ்ரீமான் க. வைத்தியலிங்க பிள்ளை எழுதியது.

சிவத் தியானஞ் செய்தார் அடைந்த சித்திகளை எடுத்துக் கூறப் புகின், ஆதிசேடனு மஞ்சுவன். அங்ஙன மாயின் நம் போலியர் நவிலத் துணிதல் நகைப்புக் கிடமே! ஆயினும் சங்கிரகமாகச் சிறிது சாற்றி உபரதி அடைவாம்.

விண்ணவருள் மிக்காராகிய விஷ்ணு மூர்த்தியானவர், தமக்கு ஒப்பாரும் மிக்காரு மில்லாத சிவ பெருமானைத் திருவீழி மிழலை முதலிய பல சிவ ஸ்தலங்களிலும், பூசித்தமையான் காத்தற் றொழிலையுங், காமன் சாமன் என்னுங் கான் முளைகளையும், சுதரிசனம் என்னுஞ் சக்கரப்படையையும் பெற்றனர்; பிரமதேவர் படைத் தற்றொழிலையும், பணவர் வணங்குங் கண்ணியத்தையும் பெற்றனர்; இந்திரன் கற்பகத்தரு, காமதேனு, உச்சைச்சிரவம் முதலிய சுக போகங்களனைத்தையும் பெற்று, பொன் னுலகோரின் புரவலனாயும் விளங்கினன்; குபேரன் சங்கநிதி பதும நிதியாதிய நவ நிதிகளையும் படைத்து, அளகாபுரிக்கு அரசனாகிய அரசனது தோழன் என்னும் அபிதானத்தையும் பெற்றார்; ஏனைய மாதிரத்தலைவர்களும், மட்டற்ற சுக போகங்களையுடைய தத்தம் பதவிகளை வகித்தனர். மார்க்கண்டேய முனிவர் மறலியை ஜயித்து, என்றும் பதினாறு வயசுடையராய் சிரஞ்சீவியாக வைகினர்; அகத்திய முனிவர் சமுத்திர பானம், விந்த மடக்கல், தக்கிண உத்தர திசைகளைச் சமப் படுத்தல் முதலிய செயற் கருஞ் செய்கைகளைப் புரிந்து வச்சிரயாக்கை பெற்று மலையவெற்பின் வதிந்தனர்; ததீசி முனிவர் விஷ்ணு மூர்த்தி விடுத்த சக்கரப் படையை மதாணியாக மார்பிலேற்று, ஆகண்டலனாகி தேவரைப் புரக்க, தான் எண்ணிய நேரத்தில் ஞான நிஷ்டை கூடி ஆவி நீத்தனர். ஆதிசேடனின் அவதாரத்தாராகிய பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாத முனிவரும், கனக சபையின் கண்ணே ஆனந்தத் தாண்டவ தரிசனஞ் செய்து ஞான யோகத்தி லிருந்தனர்; ஸ்ரீராமர் இராவண சம்மாரத்தால் தன்னைத் தொடர்ந்து வருத்திய பிரமஹத்தி நீங்கப் பெற்றுக் கற்பிற் சிறந்த சீதா பிராட்டியாரோடு பல்லாண்டுகளாக அயோத்தியா புரியை நீதி கோடாது அரசு புரிந்தனர்; ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி உபமந்நியு முனிவரிடத்தில் திருவடி தீக்ஷை பெற்றுச் சிவ பூசை யெழுந்தருளப் பண்ணி அருச்சித்து வந்தமையான், எத்தகைய வீரரையுஞ் ஜயிக்கும் ஆற்றலையும், அநிருத்திரன் என்னும் புத்திரனையும் பெற்று அட்ட பாரியரோடு துவாரகாபுரியை அரசு செலுத்தினார்; திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் முத்துச்சிவிகை,

முத்துப் பந்தர், முச்சுச் சின்னம், பொற்றாளம், படிக்காசு முதலிய வைகளைப் பெற்று, அரவா லிறந்த வணிகனை உயிர்ப்பித்து, மறைக் காட்டின் கபாடத்தைப் பிணித்து, பாண்டியன் சுரந் தீர்த்து, அக்கினியில் ஏடிட்டு வேவா தெடுத்து, ஆற்றிலிட்ட ஏட்டை எதிரேறச் செய்து, திருப்பதிகத்தால் ஓடத்தைச் செலுத்தி, என் பைப் பெண்ணாக்கி, ஆண் பனைகளைப் பெண் பனைக ளாக்கி, அந் தத்தில் தமது திருமணத்தைத் தரிசிக்கவந்த அடியார் கூட்டத் தோடு சோதியுட் கலந்தனர். திருநாவுக்கரசு நாயனார், நஞ்சினா லும், நீற்றறையினாலும், யானையினாலுந் துஞ்சாது பிழைத்து, கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரை சேர்ந்து, அரவாலிறந்த பிள் ளையை உயிர்ப்பித்து, படிக்காசு பெற்று, ஐயாற்றிற் கைலை கண்டு, அந்தத்தில் திருப்புகலூரிற் சிவத்தோடு கலந்தனர். சுந்தரமூர்த்தி நாயனார் தற்பரனால் முறிகாட்டித் தடுத்தாட்கொள்ளப் பெற்று, குண்டையூர் நெல்லழைத்து, ஆற்றி லிட்ட நிதிக்குவையை மாற்றுக் குறையாமற் குளத்திலெடுத்துச் செங்கற்கள் பொன்னாகப் பெற்று, இறைவனை இல்லக்கிழத்திபால் தூது விடுத்து, முதலை வாயினின்று முந்நூற் குழவியை அழைத்து, அந்தத்தில் பிரம விஷ்ணு இந்திராதி தேவர்கள் புடைசூழ ஐராவதத்தில் இவர்ந்து கைலையை அடைந்த னர்; மாணிக்கவாசக சுவாமிகள் குரு மூர்த்தமா யெழுந்தருளி வந்த கொன்றை வேணியாரற் குருந்த மரத்தின் கீழ் ஞானோபதேசஞ் செய்யப் பெற்று கூடற்கடவுளைக் குதிரை வர்த்தகனாகவும், கூலி யாளாகவும் வரச் செய்து, புத்தரை வாதில் வென்று, அன்னார் பொறித்த வினாக்கட்கு மூங்கைப் பெண்ணால் விடை யிறுப்பித்து, தாம் பாடிய திருவாசகமும், திருக்கோவையார் என்னுந் தமிழ் வேதங்களைச் சபாநாயகராது அருமைத் திருக்கரத்தா லெழுதப் பெற்று, அந்தத்தில் அவ்வருட் டாக்கட்குப் பொருள் கேட்ட புலியூர ருக்குக் கனக மன்றிற் பஞ்சகிருத்திய காரணமாகிய நடனத்தைப் புரியும் நடேச பெருமானைச் சுட்டிக்காட்டிப் பாலோடு நீர் விரவிய தொக்க, அப் பெருமானோடு இரண்டறக் கலந்தனர்; சண்டேசு நாயனார் தாதை தாளெறிந்துந் தனிமுத்தி யெய்தினர். கண் ணப்ப நாயனார் ஆறு தினத்தில் அமலனோடு ஐக்கியப்பட்டனர்; ஏனைய நாயன்மாரும் எல்லையற்ற இன்பத்தை நுகரும் பெருவாழ் வெய்தினர். அருச்சுனன் பாசுபதம் பெற்றுப் பாரதப் போரிற் பகைவரை ஜயித்து வாகை மாலை சூடினன். மலையத் துவசனும், மலையரையனும் இறைவனுக்கு மாதுல ராயினர்; முசுக்கலையானது முசுகுந்தச் சக்கரவர்த்தி என்னும் நாமத்தோடு அவதரித்து அகில மனைத்தையும் தவளசத்திர நீழலில் வைகித் தனியாழி உருட்டியது; சிலந்திப்பூச்சி கோச்செங்கட் சோழனாகப் பிறந்து பொன்னி நாட்டைப் பொதுக்கடிந்து ஆண்டது; சீவ வதையைத் தணந்து வைகிய நாரைப்பட்சியும் சிவலோக வாழ்வைப் பெற்றது; மகா

பாதகனாகிய மறையவனும் மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைந்தான்.

சகோதர சகோதரிகளே! மேலே கூறிப் போந்த சரிதைகளான தேவர் முதற் பக்ஷியீறான அனைவரும் சிவத் தியானத்தால் முத்தியடையப்பெற்றனர். இவைகளைநாம் எட்டுணையுஞ்சிந்தியாது, மைதுனமுஞ் சோறுமே மனிதப் பிறவி யெடுத்ததாலாகிய பயனெனக் கருதி யீசுர வழிபாடியற்றாது வாளா விருக்கின்றேம்! வன் கண்ணனாகிய மறலி வருங்காலை யாது செய்ய வல்லேம்! நமது யாக்கையோ இந்திர தனு! வாழ்வோ மேகத்தி லுதிக்கும் மின்னல்! செல்வமோ பிரவகித்துச் செல்லும் ஆறு! சுற்றமோ சந்தைக் கூட்டம்! இத்தகைய அகில இன்பங்களனைத்தும் அநித்திய மென்பதை நன் குணர்ந்த ஆன்றோர் சிவத் தியான மற்ற சிதடரை விளித்து, "வில்வக் குடலை யெடுக்காமல் வீணுக் குடலை யெடுத்தீரே"! என்றும், "வெறியார் மாலை தொடுக்காமல் வீணே மாலை தொடுத்தீரே!" என்றும், "ஐந்தெழுத்தை" நூற்றெட்டு செபியா துண்பான் அமேத்தியத்தை யேற்றுண்பவ னாகும்!" என்றும் இழித்துக் கூறி யிருக்கின்றார்கள். ஆதலால் எமக்குக் கிடைத்த வாணாளை வீணாளாக்காது, அண்டர் நாதனை, அடியார்க்கெளியனை, காலகாலனைக் கங்கை வேணியனை, திங்கட் சடையனைத் திரிபுர தகனனை, மா லய னறியா வளரொளிப் பிழம்பனை, முத்தி நாதனை மூவா முதல்வனை, அன்புளோர்க் கருளும் அமிர்த வாரிதியை உள்ளகந் தன்னை ஒருவழி நிறுவித் தோத்திரம் பலவுஞ் சொல்லி அன்பாக, அல்லும் பகலு மடியிணை மலரை, மறனெலா மொழித்து வழுத்துவோ மாயின், பிறவா முத்தி பெறுவது திண்ணமே.

---

## வாழ்த்து

---

கட்டளைக் கலித்துறை

வில்லாண்ட வீரன் விஜயன் தவஞ்செய்ய வேடவனாய்
அல்லாண்ட கூந்த லுமையோடு போந்த அமல! கருங்
கல்லாண்ட நெஞ்சர் கதிபெற ஞானத்தைக் காட்டு லக்ஷ்மி
பல்லாண்டு நின்று நிலவிட நீயருள் பாலிப்பையே.

அரியா ருடனம் புயத்தானு நேடி யறிவரிய
கரியா ருரிய னருளா லுயர்ந்த கலைதெரிந்த
பெரியார் கரங்களி லேறியெஞ் ஞான்றும் பிறங்கிடுமேழ்
பரியா ரென லக்ஷ்மி பல்லூழி பாரிற் பரவுகவே.

---

# விஜயா

அல்லது

# 3 1 2

ஸ்ரீமான் கி. வி. ஜகநாதன் எழுதியது

சத்ய நாராயணனது தகப்பனார் இறந்து ஒருமாத மாகிறது சத்ய நாராயணனுக்குத் தகப்பனார் அன்றுதான் இறக்குந்தறுவாயி லிருப்பதுபோலும், அவனிடம் மிகுந்த இரகஸ்யமாகச் சொன்ன அதிசயக் கதையும் அப்பொழுதே கேட்பவன் போலும் இருக்கிறது. எந்த அறையில் தன் தந்தை இறந்தனரோ அதே அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். தன் தகப்பனார் உயிரிழக்க ஒரு வாரத்திற்கு முன்னர் கூறினதை நினைத்துக் கொள்கிறான்.

குழந்தாய்! சத்யா! இப்பொழுது உனக்கு அத்யாச்சரிய மானதும், என்னால் அறிய முடியாததுமான சில விஷயங்களைக் கூறுகிறேன். கவனமாய்க் கேள். என்னுடைய தகப்பனாரும் உன்னுடைய பாட்டனாரும் ஆகிய கிருஷ்ணதேவர் இந்த விஷ யத்தை என்னிடம் தமது அந்திய காலத்தில் கூறினார். அந்த வழக்கை யொட்டியே உனக்கு நான் இப்போது இதை வெளி யிடுகிறேன்.

என் தந்தைக்குப் பாட்டனாராகிய நாகேந்திரர் ஒரு பெரிய முதலாளியாயும் வியாபாரியாயும் இருந்தார். அவர் இதே ஊரில் இதே வீட்டில் வசித்தார். பெருத்த செல்வத்துக்கு அதிபதியான அவர் ஒரு கௌரவமான குடும்பத்தில் ஒரு அழகிய பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டார். எனது பாட்டனாரைத் தனது இருபத்தைந்தாவது வயதில் பெற்றார். இவ்வூரில் நாகேந்திரரே பெருத்த ஜமீன்தார் போன்று நல்ல வாழ்க்கை நடத்தி வந்தார். ஆனால் குழந்தாய்! எப்பொழுதும் ஒருவன் சுகத்திலேயே கிடத்தல் உலகிற்குப் பொருந்தாது. சுகமும் துக்கமும் கலந்து கலந்து வருதல் உலக இயல்பு. ஆதலின் நல்ல மனைவியும், புத்திரனும், சம்பத்தும், செல்வாக்கும் பொருந்தி இன்ப வாழ்க்கையில் சுகித் திருந்த நாகேந்திரருக்கு ஒன்றன்மேல் ஒன்றாய்க் கஷ்டங்கள் வரத் தலைப்பட்டன. எனது பாட்டனாருக்குப் பின் பிறந்த இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் பிறந்த உடனேயும் ஒரு வருஷத்திற் குள்ளேயும் மரித்துவிட்டன. நாகேந்திரருக்கும்

அவர் மனைவிக்கும் இருந்த வருத்தம் சொல்லத் தரமல்ல. ஒருவர்க் கொருவர் ஆறுதல் கூறிக்கொண்டு எனது பாட்டனாரைச் செல்வக் குழந்தையாய் வளர்த்து வந்தனர். பின்னர், தமது முப்பத்தைந் தாவது வயதில் தனது அருமை மனைவியையும் இழந்த துர்ப்பாக் கியரானார். என்னே! துன்பத்தின் தொடர்பு. இனி ஆற்று வார் தேற்றுவார் இலராய்த் தனது செல்வச் சிறு குமரனைக் கண்மணிபோல் பாவித்து, இருக்கின்ற அரை உயிரையும் உடலில் நிறுத்தி வந்தார். தனது மனைவி யிறந்த துக்கத்தின் அதிர்ச்சி நீங்க ஒருவாறு ஐந்தாறு வருடங்கள் ஆயின. ஆறுவது வருடத்தில் தனது அருமைக் குமாரனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. என் செய்வார் பாவம். பெருத்த இடி விழுந்தவர்போல் ஆய்விட் டார். பேர்போன வைத்யர்களைக் கொண்டு பார்த்தார். சித்தம் தெளிந்தபா டில்லை. மந்திரவாதிகளுக் கெல்லாம் காசை வாரி வாரி இறைத்தார். ஒன்றிலும் குணம் ஆகவில்லை. என்ன செய்வார் நாகேந்திரர்? தனது அருமை மனைவியை இளவயதிலே பறி கொடுத்தார். தனது ஒரே மகனுக்கோ தீராத பைத்தியம் பிடித்து விட்டது. பாவம்! இரண்டு கண்களும் இழந்த அந்தகன் போலப் பரிதவித்தார். தான் முன்னால் அனுபவித்த சுகங்களெல்லாம் கனவு போலிருந்தது. அவருக்கும் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது. பெருத்த சுகபோகத்தில் இருந்த மனிதன் கொடிய வருத்தங்களை எப்படித் தாங்குவான்? நாகேந்திரர் இந்த வருத் தங்களுக்குள்ளே வேறொரு கவலையையும் ஏற்றுக்கொண் டிருந்தார். தனது மகனுக்கு வேண்டியதெல்லாம் செய்தும் பயன்படாத பின்னர், ஏதோ பெரிய பெரிய யோசனைகள் செய்வது போலிருந் தார். தனக்கிருந்த நிலங்களெல்லாம் விற்றார். தனது பையனுக்கு இருவரை கார்டியனாக நியமித்தார். இந்தக் காரியங்களெல்லாம் செய்த ஆறுவது மாதம் நாகேந்திரர் சகல பற்றுகளையும் விட்டு விண்ணேகினர். இறப்பதற்குக் கொஞ்ச நாழிகைக்கு முன்னர் தனது அந்தரங்க வேலைக்காரனாகிய கிழ மாதவனை யழைத்து 'மாதவா! இன்னும் கொஞ்ச நாழிகையில் நான் இறப்பது நிச்சயம்' என்று கண்ணீர் விட்டுக்கொண்டே கூறலானார். 'எனது கண்மணியைப் பறிகொடுத்தது மல்லாமல் எனது ஒரே மகனை நேராகப் பார்க்கும் பாக்யம் எனக்கில்லாமற் போயிற்று. ஈஸ்வரன் எனக்கு இந்த நிலைமையை அளித்தான். நான் எல்லாத் துக்கங் களிலும் புதைந்து ஊறிவிட்டே னாகையால் எனக்கு இப்பொழுது ஒரு துக்கமும் தோன்றவில்லை. ஆனாலும் என் மனத்தில் ஒரு ரகஸ்யம் புதைந்து கிடக்கிறது. நீ அதைப் பத்திரமாகப் பாதுகாத்து என் மகனுக்குத் தெய்வானுகூலத்தால் இந்த வியாதி நிவர்த்தியானால் அவனுக்கு அறிவிப்பதாக உறுதி கூறுவாயா? அவ்வாறு செய்வாயானால் என் மனத்திலுள்ள பாரத்தை இறக்கி

விட்டு அமைதியாய்ச் சாவேன்' என்றார். மாதவன் அவ்வாறே உறுதிகூற நாகேந்திரர் கூறத் தொடங்கினர். 'மாதவா! நான் ஒரு பெரிய ஏற்பாடு செய்திருக்கிறேன். அது ஆச்சர்யமாக இருக்கும். இது வேறு ஒருவருக்கும் தெரியக்கூடாது. ஏனெனில் இது நமது சந்ததிக்கே சொந்தம். கவனித்துக் கேள். இந்த ஏற்பாட்டிற்குச் சில குறிப்புகள்கூட ஏற்படுத்திக்கொண்டு நான் மறவாமல் மனனம் செய்வது வழக்கம். மாதவா! என் உயிர்......இப்பொழுதே பேசமுடியவில்லை. அருகில்வா' என்றவுடன் மாதவன் அருகே குனிந்துகேட்க 'விஜயா......மூன்னூற்றுப் பன்னிரண்டு அந்தப்படங்கள்' என்று அந்த அறையில் வரிசையாகச் சுவரில் வர்ணங்களால் எழுதப்பட்டிருந்த படங்களைக் காட்டிக்கொண்டே உயிர் துறந்தார்: மாதவன் அதற்குமேல் கேட்கமுடியாதவனாய் விட்டான். கண்ணீர் ஆருய்ப் பெருகப் பிணத்தின்மேல் விழுந்தான். உண்மை வேலைக்காரனென்றால் அவன்தான் என்று என் பாட்டனார் சொல்வாராம்!

குழந்தாய்! அந்த ரகஸ்யம் விஜயா. **312**. சுவரில் எழுதியுள்ள படங்கள் இந்த மூன்றிற்கும சம்பந்தப்பட்டவை. இனி இது வரைந்த விஷயத்தைக் கூறுகிறேன் கேள். நாகேந்திரர் இறந்த உடன் அவருக்குச் சகல கிரியைகளும் நடந்தேறின. பின் கார்டியனாக இருந்த இருவர்களும் நாகேந்திரரது சொத்தெல்லாம் சேர்த்து மதிப்பிட்டுப் பார்க்குங்கால் ஐம்பதினாயிரத்திற்குள் அடங்கின. எல்லோரும் ஆச்சர்யங்கொண்டனர். கப்பல் கப்பலாய் வியாபாரஞ் செய்தவர் பெரிய கிராமங்களுக்குச் சொந்த ஜமீன்தாரராயிருந்தவர் எல்லாச் சொத்தையும் எப்படிச் செலவழித்தார் என்பதே எல்லோருக்கும் பெருத்த யோசனையா யிருந்தது.

சிலர் தர்மங்களில் செலவழித்திருக்கலாம் என்றார்கள். சிலர் எவ்வளவுதான் செலவு செய்யட்டுமே அவர் சொத்து என்ன குறைந்து விடுமா? என்று ஆக்ஷேபித்தார்கள். (வரும்)

---

## மின்சாரக் கருவி

ஒரு ஜெர்மன் நிபுணர் கை விரலில் அணியத்தக்க ஒரு வித மின்சாரக் கருவியை உண்டுபண்ணி யிருக்கிறார். அதனைப் போலீசார் கையில் மாட்டிக்கொண்டு கைதுசெய்ய வேண்டிய எந்த மனிதனையாவது தொட்டால் அவன் உடனே மயங்கி விழுந்து விடுகிறான். ஆனால் கிட்ட நெருங்கித் தொடுவதற்கு அவன் விட்டால் தான் எளிது.

---

# வைதிக தேவதைகள்.

(368-ம் பக்கத் தொடர்ச்சி)

## II

## தேவதைகளின் வடிவம்.

ஸ்ரீமாந் த. ராமகிருஷ்ணன் அவர்கள்

(வேத மாணுக்கன்.)

### II. பிராஹ்மண நூற் கொள்கை.

'தேவர் யாவரும் மரணத்திற்கு அஞ்சிப் பிரஜாபதி யிடத்து ஓடிச் செல்கின்றனர்.' அஞ்சுதலும் ஓடுதலும் இங்கு வருணனை. பிரஜாபதி யென்னும் ஆன்மாவை அணுகுதலால் புலன்கள் முதல் யாவும் இறவா நிலை எய்துகின்றன. இதுவே வைதிக தத்துவம். மேலே, வேத மந்திரங்களால் தேவர்கள் இறவா நிலை யெய்து மியல்பினைக் குறித்தவாறே இத்தொடரும் அறிவுறுத்து கின்றமை காண்க. மறைகளாகிய வைதிக மொழியாக்க நடையில் யாண்டும் இவ்வகையாகவே வருணிக்கப்படும். இவ் வியல் புணர்ந்து பொருள் கொள்ளாவிடின், வேதமந்திரங்களின் நுண்பொருள் காண்டற் கியலா. இவை மட்டிலு மன்று, பிராஹ்மணங்களும் புராணங் களும், காதைகளும் இம் முறையினையே பின்பற்றி யிருக்கின்றன. தேவர்கள் அரக்கர்களுக்கு அஞ்சி பிரம்மாவிடத்துச் செல்ல பிரம்மாவும் இந்திரனும் மகேசுவரனும் மகாவிஷ்ணுவை அடைக் கலம் புகுந்தனர் என்று புராணங்களில் கூறப்படுகின்ற இத்தகைய புனைகதைகள் யாவும் மேற்குறித்த முறைபற்றி ஆராயவேண்டுவன வாகும். இதனையே அத்யாத்மிக நோக்கு என்பர். நமது உட லமைப்பினையே இவ்வகையாகப் பகுத்துக் காண்டல் சிறப்புடைய தாகும். யாக்கையே தேவர்கட்கு இல்லம், யாக்கையே சப்தரிஷி களின் ஆசிரமம். இவ் உடலிலேயே தேவசபை நடைபெறுகின் றது. இவ்வுடலிலேயே இந்திராதி தேவர்கள் உறைகின்றனர். இவற்றி னிருப்பைத் தத்தம் உடலங்களில் கண்டு நுகர்தல் வேண்டு மென்பதே வைதிக தர்மத்தின், வேத நெறியின் சிறந்த நோக்க மாகும். யோக நெறியால் பெறப்படும் இச்சீரிய காட்சியி னியல் பினை இத்தொடர் புலப்படுத்துகின்றது. கல்லூரிகளில் மாணுக்கர் கட்கு வானசாத்திரம் கற்பிப்பதற்காகப், பலகையின் மீது வானக் காட்சியின் படம் தொங்கவிட்டுச் சூரியன் சந்திரன் முதலிய வானப் பொருள்கள் இங்கிங்கிருக்கின்றன வென்று சுட்டிக் காட் டிப் போதிக்கின்றனர். ஆனல், உண்மையில் சூரியனும் சந்திர

னும் அப்படத்தில் இருக்கின்றனவா? அன்று, அன்று. வானத்தி லிருக்கின்றன. அவ்வாறே யாக்கையின் அமைப்பிற் கிணங்க யாகக் கூடம் (யக்ஞ மண்டபம்) அமைக்கப் படுகின்றது. உடலில் மறைவாக அமைந்து கிடப்பனவற்றின் நுட்பங்கள் யாகச் செயல் களால் விளக்கிக் காட்டப் படுகின்றன. பிராஹ்மண நூல்களில் விதிக்கப்படுகின்ற செயல்க ளொவ்வொன்றுடனும் உடற்றத்துவக் கோட்பாடுகளும் கலந்துரைக்கப் படுவதற்கு இதுவே காரணமா கும். எனவே, யாகச் செயல்களின் முழு அறிவும் கைவரப் பெறுவிடின், உடற்றத்துவக் கோட்பாடுகளை உணர்ந்து கொள்ள முடியாது. வேத மந்திரங்களின் கருத்துக்கள் சரிவர உணரப் பெறுவரையில் அவற்றில் பகரப்படும் தேவதைகள் யாக்கையில் யாண்டுறைகின்றன வென்பதும், எத் தொழில் புரிகின்றன வென் பதும் புலப்படுத்திக் கொள்ளல் அருமையாகும். இவற்றி னியல் பினைப் பிற் கூறுவதும், இனி;

மக்களே தேவ ராவர்.

மர்த்யா ஹ விர அக்ரே தேவா ஆஸு:
ஸ யதைவ தே ப்ரஹ்மணுபு ரத்தாம்ருதா ஆஸு:

சதபிதப்ராஹ்மணம் XI, ii, iii, 6.

'துவக்கத்தில் தேவர் யாவரும் மக்களா யிருந்தனர். அவர்க ளிடத்து மெய்யறிவு நிறைந்து பரவியதால் அமர ராயினர்.' மேற் குறித்த வேதமந்திரக் கருத்தினை இதனோடு ஒப்பிட்டுக் காண்க.

ப்ரஜா பதிர் தேவாந ஸ்ருஜத,
தே பரப்ம்நா ஸந்திதா அஜாயந்த,
வாந் வ்யத்யத்.

தைத்திரிய ப்ராஹ்மணம். III, x, ix, 1.

'பிரஜாபதி தேவர்களைத் தோற்றுவித்தார். பாவத்தால் கேடுற்றிருந்தார். அவனால் துன்ப மெய்தினர்.' தேவர்கள் பால் பாவம் நிலைபெற்றிருக்கும் வரையில் மரணத்திற்கு அஞ்சியிருந் தனர். அவர்களி னின்று பாவம் விலகியதும் இறவா நிலை பெற்ற னர். மேற்குறித்தவாறு தேவர் முதலில் மக்களா யிருந்தனர். அவ்வாறு குறித்ததற்குக் காரணம் பாவத்தோடு தொடர்புடை யவர்களாயிருந்தமையின் மக்கள் (மர்த்தியர்) அல்லது இறக்குந் தகையரா யிருந்தனர். பாவத்தின் கைம்மாறு மரண மாகும். பாவம் நிலைத்த இடத்து மரணமும் துன்பமு முண்டு, பாவ மிருக்கும் வரையிலும் துன்புறுதல் வேண்டும். பாவத்தைக் களைந்ததின் பின்னரே துயரமும் மரணமும் அகலும்.

*ப்ரஹ்மச் சர்யேண தபஸா தேவா ம்ருத்யு முபாக்நத*
*இந்த்ரோ ஹ ப்ரஹ்மச் சர்யேண தேவேப்ய: ஸ்வராபரத்.*

அதர்வவேதம் XI, v, 19.

'பிரஹ்மச் சர்ய தவத்தால் தேவர் மரண பயம் நீக்கினர். பிரஹ்மச் சர்யத்தால் இந்திரன் தேவர்களுக்குக் காந்தி அளித்த னன்.' தவத்தால் தேவர் அமரராயினர். உங்கள் உடலி லுரை யும் புலன்களாகிய தேவர்களைப் பிரமச் சர்யாதி தவங்களில் பயிற் றுவீர்களாயின், அவைகளும் காந்தி பெறுவதை நீங்கள் கண்கூடா கக் காணலாம். ஆன்ம சக்தியாலும் அவைகள் சைதந்நியத் தன்மை யடைதல் கூடும். இப் பண்புகளைப் புறவுலகில் நெருப்பு முதலிய தேவதைகள் முழுமுதற் சோதியாம் பரம்பொரு ளிடமிருந்து பெறுகின்றன.

ஸர்வே ஹ வை தேவா: அக்ரே ஸத்ருசா ஆஸு:
ஸர்வே புண்யாஸ் தேஷாம் ஸர்வேஷாம் ஸத்ருஸானும்
ஸர்வேஷாம் புண்யாநாம் த்ரயோ அகாமயந்தாதிஷ்டாவாந:
ஸ்யா மேத்யக்நி நிருத்ர: ஸூர்ய:
தே அர்சந்த: ச்ராம்யந்த ஸ்சேரு
......தேஅதிஷ்டா வானோ அபவந்......
ஸோ ஹ வா இதமக்ரே அக்நெள வர்ச ஆஸ,
யதிதம் அஸ்மின் ஙர்ச: ஸோ காமயதேதம் மயி வர்ச:
ஸ்யாதிதி..... ததோ அஸ்மின் னேதத் வர்ச ஆஸ.
ஸோ ஹ வா இதமக்ர இந்த்ர ஓஜ ஆஸ:
யதிதம் அஸ்மின் ப்ராஜ: ஸோ அகாமயதே தம் மயிப்ராஜ:
ஸ்யாதிதி.........ததோ அஸ்மின் னேதத் ஹ்ப்ராஜ ஆஸ.

சதபதப்ராஹ்மணம். IV, v, iv, 1—5.

"தேவர்கள் யாவரும் முதலில் ஒரே தன்மையாகப் புண்ணிய வான்களா யிருந்தனர். அவர்களுள் அக்நியும் இந்திரனும் சூர்யனு மாகிய மூவரும் மிகுந்த சிறப்படைதல் வேண்டுமென்று விரும்பி னர். அவர்கள் இறை வழிபாடும் தவமும் புரிந்தனர்..... இதனால் அவர்கள் உயர்வு பெற்றனர். அக்நிக்கு முதலில் இவ்வித ஒளி கிடையாது. தான் மிக்கொளி பெறல்வேண்டுமென்று விரும்பி யதனால்......அவ்விதமே அவனுக்கு ஒளி பெருகியது. இந்திர னுக்கு முதலில் இத்துணை ஆற்றல் கிடையாது. தான் பேராற் றல் படைத்தல் வேண்டுமென்று விரும்பியதனால்......அவனுக்கு ஆற்றல் மிகுந்தது. சூரியனுக்கு முதலில் இத்துணை காந்தி கிடை யாது. தான் மிகக் காந்தி யடைதல் வேண்டுமென்று விரும்பியத னால்......அவனுக்குக் காந்தி அதிகரித்தது."

இவ்விதமாகத் தேவர்களின் சிறப்பும் பெருகியது. இவ்வகையாக மக்களும் முயலின் சிறப்புறுவர். மிகுந்த ஆர்வத்துடன் நல்லறங்க ளியற்றுபவன் புகழ் பெறுகின்றான். தேவர்களும் செய்வினையால் - முயற்சியால் உயர்வு பெறுகின்றனர். தேவர்களுள் (1) கர்ம-தேவ ரென்றும் (2) ஆஜாந-தேவ ரென்றும் இரு பிரிவுண்டு. இதனை பிரஹதாரணிய உபநிடத்தில்,—

## இருவகைத் தேவர்.

யெ கர்மணு தேவத்வ மபி ஸம்பத்யந்தே அத யெ சதம்
கர்ம தேவாநா மாநந்தா ஸ ஏக ஆஜாந தேவாநா மாநந்த:

பிரஹதாரண்யம் IV, iii, 33, சதபதம் XIV, vi, i, 15,

'செய்வினைகள் அல்லது புருடார்த்தங்கள் புரிந்து தேவத்தன்மை பெறுகின்றனர். கர்ம தேவரது நூறுமடங் கின்பம ஆஜான தேவ ரின்ப மொன்றிற்கு நிகர்.' எனவே, கர்ம தேவர்களினும் ஆஜான தேவர் சிறப்புடையவர். பிறப்பான் தேவத்தன்மை பெற்றோர் ஆஜாந தேவ ராவர். செயலான் தேவத்தன்மை பெற்றோர் கர்ம தேவ ராவர். இவ் இரு வகையாரினும் ஆஜான தேவர் நூறுமடங்கு உயர்ந்தவர்க ளென்று சதபத ப்ராஹ்மணம் அறிவுறுத்தியது. ஆஜான தேவர்களாவார் கருவிலே திருவுடையார்க ளாவர்.

உபயெ ஹவா இதமக்ரெ ஸஹாஸுர் தேவாஸ்ச மநுஷ்யாஸ்ச
தத்யத்த ஸ்ம மநுஷ்யாணும் நபவதி தத்தஸ்ம தேவாந் யாசந்தெ
இதம் வை நாஸ்தீதம் நொஅஸ்த்வதி தெதஸ்யா ஏவ.
யாஞ்சாயை த்வேஷேண தேவாஸ்திரோ பூதா:
நேத்ஹிந ஸாநீதி தஸ்மாந் நோப திஷ்டேத்.

சதபதப்ராஹ்மணம். II, iii, iv, 4.

'தேவர்களும் மக்களும் ஆதியில் ஒரே தன்மையாயிருந்தனர். மக்களிடத்தில் இல்லாதவைகளுக்காக, அவற்றை அடைதற்பொருட்டுத் தேவர்களை வேண்டினர். யாம் விரும்பியவற்றை அவ்வாறே அடைகின்றோம். மக்களின் இத்தகைய வேண்டுகோளால் தேவர் மறைந்தனர். ஆகலின் அடிக்கடி வேண்டப்படுதல் வேண்டாதாயிற்று.' இவ்வகையாக நல்வினை யாற்றவேண்டுவதும் உயர்ந்த எண்ணங்களைச் சிந்திக்க வேண்டுவதும் மக்கட்கு இன்றியமையாததென இங்ஙனம் புனைந்துகூறி வற்புறுத்தப்படுகின்றன. இஃது மக்களிடத்து தேவத்தன்மை உண்மையில் நிலவியிருக்கின்றதென்பதை வலியுறுத்துகின்றது. இக்கருத்தினைக்கொண்டே தேவர்கள் உள்ளத்தில் பிறக்கின்றன ரென்று மறை பகர்கின்றது.

# வைதிக தேவதைகள்

## தேவர் உள்ளத்தில் பிறக்கின்றனர்

யெ தேவா மனோ-ஜாதா மனோயுஜோ தக்ஷக்ரத வஸ்தே
நோ அவந்து தே ந: பாந்து தேப்ய: ஸ்வாஹா.

எசுர் வேதம் IV, II.

'இத் தேவர்கள் (மனோ-ஜாதா Mind-born) உள்ளத்தில் பிறக்கின்றனர். இவர்கள் உள்ளத்துடன் கலந்துறைந்து அமைதியாக நல்வினைக ளாற்றுகின்றனர். அவர்கள் நம்மைக் காப்பாற்றுகின்றனர். நமக்கு உதவி புரிகின்றனர். அவர்கள் பொருட்டு நாம் (ஸ்வ-ஆ-ஹா) தன்னலங் களைந்து தியாகம்செய்கின்றோம். தன்னலமின்றிப் பிறர் நலம் நாடுகின்றோம்.' தேவதைகளின் உண்மைத் தத்துவம் உணர்த்த இம்மந்திரம் திறவுகோல் போன்றது. தேவர்கள் யாவரும் 'மனத்தின் புத்திரர்' மனது தேவர்களின் தந்தை. தேவர் மனத்தி லுறைந்திருக்கின்றனர். தேவர்கள் பிதாவிடத்துப் பிதிர் பக்தியுடன் உறைதல் கடமையு மாகும், இப்பொருள்பட அதர்வ வேதத்தில்.

ஸம்ஸிசோ நாம தே தேவா யெ ஸம்பாராந்த் ஸமஹ் பரன்
ஸர்வம் ஸம் ஸிச்ய மர்த்யம் தேவர்: புருஷ மாவிசன்.
க்ருஹம் க்ருத்வா மர்த்யம் தேவா: புருஷ மாவிசன்
ரேத: க்ருத்வாஅ அஜ்யம் தேவா: புருஷ மாவிசன்.
யா ஆபோ யாஸ்ச தேவதா யா விராட் ப்ரஹ்மணு ஸஹ
சரீரம் ப்ரஹ்ம ப்ராவிசச் சரீ ரேதி ப்ரஜாபதி:
ஸூர்யச் சக்ஷுர் வாத: ப்ராணம் புருஷஸ்ய விபேஜிரெ
அதாஸ யேதர மாத்மாநம் தேவா: ப்ராயச் சன்னக்நயெ.
ஸர்வாஹ் யஸ்மின் தேவதா காவொ கோஷ்ட இவாஸதெ.

அதர்வ வேதம். XI, Viii, 13-18-29-30-31-32.

"எல்லாப் பொருட்களையும் தன்னிடத்தே சேர்க்கப்பட்டவனை ஸம்ஸிச-தேவ னென்பார். இத்தேவன் மனிதனிடத்துப் புகுந்துறைகின்றான். உடல் வடிவாகிய மனித வீட்டைப் படைத்து, அம்மனிதனிடத்து இத்தேவன் உள்நுழைந்திருக்கின்றான். ரேதசை நெய்யாகச் செய்து இத்தேவன் மனிதனிடத்துப் பிரவேசித்திருக்கின்றான். விராட்டாகிய பிரஹ்மத்துடன் தேவதைகளும் புனலும் உறைகின்றன. அவற்றோடு பிரஹ்மன் உடலில் நுழைகின்றான். உடலை இயக்குகின்றவனைப் பிரஜாபதி நில்வுகின்றான். அம்மனிதனுக்குக் கண் சூரியனால் அமைக்கப்படுகின்றது. உயிர் காற்றினால் நிறுவப்படுகின்றது. பிற உயிர்த் தன்மைகள் இதர தேவதைகளால் அக்கியின் வாயிலாகக் கொடுக்கப்படுகின்றது. ஆகலான் அறிஞர்கள், இம்மனிதனிடத்துத் தேவ

தைகள் யாவும் தொழுவில் கட்டப்பட்டுக் கிடக்கின்றன பசுக்களை யொப்ப உறைதலான் பிரஹ்ம மென்று விளிக்கின்றனர்."

## வேத நலகமும் வேள்வியும்

இந்தப் புருடன் என்ற சீவான்மாவின் ஆதரவில் தேவதைகள் முழுவதும் உறைகின்றன. புறவுலகின் ஞாயிறு மதி காற்று முதலிய தேவதைகளும் இப் புருடனின் உடலில் உறுப்புக்களாக நிலவுகின்றன. தேவர் தேவனுகிய சீவான்மாவும் ஆண்டுறைகின்றது. மேற்குறித்த மந்திரங்களில் இத்தேவ தேவனைப் பிரஜாபதி யென்று அழைக்கப்படுகின்றது. உடல்களில் சூக்கும அணுத்தன்மை வாய்ந்த சீவர்கள் பல உறைகின்றன. அவைகளே இத்தேவனின் குடிகளாவன. ஒ ருடலில் இத்தகைய நுண்ணிய கீடாணுக்கள் கோடிக் கணக்கா யுள. அவை அனைத்திற்கும் இப் பிரஜாபதியே தலைவனுவான். புலன்கள் யாவும் இதன் பசுக்கள் இச்சீவான்மா அப்பசுக்களை மேய்க்கும் இடையன், இவ்வுடலா லியற்றுஞ் சிறந்த யக்ஞத்திற்கு (நற்செயல்களுக்கு) 'கோமேத' மென்று கூறப்படும். உடலாகிய இத்தொழுவத்தி லுறையும் பசுக்களை ஆன்மாவாகிய கோபாலன் காப்பாற்றுகின்றுன். உடல் இரதம், புலன்கள் இரதத்தில் பூட்டும் குதிரைகள், இரதத்தைச் செலுத்துபவன் ஆன்மாவாகிய வீரன், இவ்வீரன் யாக்கையா மிரதத்தில் புலன்களாம் பரிகள் பூட்டிப் புரியும் வீரச் செயல்களாம் நல்வினைகள் 'அஸ்வ மேதம்' என்று குறிக்கப்படும். இவ் வான்மா பிறப்பில்லா அஜன், (ஜன்-பிறத்தல். அஜன்-பிறப்பில் லான்) உடல் முதலிய துணைக் காரணங்களொடு இவ்வான்மா புரியும் சீரிய செயல்களை 'அஜ மேதம்' என்பார். ஆன்மாவாகிய கர்த்தா புலன்களாகிய இருத்துவிக்குகளோடு ஆயுட்காலம் நூறாண்டுகளும் புரியும் அறவினைகளாகிய வேள்விகட்குச் சதக்ரது என்று பகரப்படும். இங்ஙனம் நல்வினைகளாற்றிய ஆன்மா சத்கிரதுவாகிய இந்திர னுவான். அவனுக்கு இவ்வுடல் நந்தனவனம், புலன்களும் உறுப்புக்களும் தேவர் குழாம். இவ்விந்திரன் அவர்கட் கரசன், இவ்வுடல் தேவநகராகிய அமராவதியும் தேவ சபையுமாகும், கல்பதரு அல்லது கற்பனைகள் விளைவிக்கும் மரம் தோற்ற வொடுக்கங்களாகிய மனத்தின் செயல். எவ்விதக் கற்பனைகள் மனத்தில் நிகழ்கின்றதோ உறுதியாக அவ்விதப் பயன்களை அடையலாம். சப்தரிஷிகளின் நிலயமு (ஆசிரமம்)ம் இவ்வுடலேயாகும், இவ்வகையாகப் புராணங்களிலும் காதைகளிலும் விளக்கப்படுகின்ற பலவகைக் கற்பனை (அணிந்துரை)களும் ஈண்டு அத்யாத் மிகப் பொருளில் அறிவுறுத்தப்பட்டன. இத்தகைய கற்பனைக் கருத்துக்கள் உள்ளத்தில் பதிந்துவிடின், வேத மந்திரங்களின் உட்பொருட்களும் புராண கதைகளின் தத்துவங்களும்

தெளிவுபடப் புலனுகும். ஆகலான், யாவற்றிலும் முதன்மை யாகத் 'தேவதைகளின்' கற்பனைகளை நன்ருக ஆழ்ந்து சிந்தித்து மனத்தின்கண் நிறுவவேண்டுவது இன்றியமையாத தாகும்.

## III தேவதைகளின் உட்பொருள் கொள்கை.

### மூவகைப் பொருட் கோட்பாடு.

மறைகளில் அறிவுறுத்தப்படும் தேவதா கற்பனைகள் அத்யாத் மிகப் பொருள் பற்றியன வாகும். அத்யாத் மிகமாவது எப்பொருட் களும் ஒரு சீவனெடு பொருந்தியதாகக் கூறப்படுவது. "ஆன்மா, அறிவு, உள்ளம், அறிவுப் புலன்கள், தொழிற் புலன்கள், யாக்கையிற் பொருந்திய பிற உறுப்புக்கள்." இப்பகுதிக ளனைத் தும் ஒன்றுபட அத்யாத் மிகப் பொருளில் கொள்ளத்தக்கன. ஒரு ஆன்மாவொடு பொருந்துவன அனைத்தையும் அத்யாத் மிகப் பொருள்படவே துணிதல்வேண்டும். மேற்குறித்த அதர்வ வேத மந்திரங்களில் புருடனுடைய யாக்கையில் ஆன்மாவின் ஆதரவால் சகல தேவதைகளும் உறைவதாகத் தெளிவுபடப் புலப்படுத்துகின் றமை ஓர்க. இக்கருத்தினை வேத மோதுவார் எஞ்ஞான்றும் மறவாது கடைப் பிடித்தல்வேண்டும். யான் சீவான்மா, என் பெயர் அல்லது என தியல்பினை மறைகளில் இந்திரன், அக்நி, சூரியன், சோமன், சவிதா, ஆதித்தியன் முதலிய நாமங்களால் வருணிக்கப்படுகின்றன. வேதங்களில் இந்திரன் அக்நி வருணன் முதலிய மொழிகளால் குறிக்கப்படுகின்ற பிறபொருட்களும் நம் முடலில் நம் மாதரவால் நிலவுகின்றன. இவை ஆன்மாவிற்கு மேற்பட்ட பரமான்மாவின் ஆதரவால் உறைகின்ற பிற தேவதா கணங்களாகும். இத்தேவதைகளுக்குத் தலைவன் நாம். இவை அத்யாத்மிகப் பொருள் பற்றியன. இத்தேவதைகள் அத்யாத் மிகமாக அல்லது உயிருடைய உடலொன்றில் அமைந்து கிடப் பதுபோலவே, புறத்து இப்பெரிய உலகினும் நிலவுகின்றன. யாக்கையில் சீவான்மா தலையாயிருந்து இயக்குகின்றது. உலகத்து யாண்டும் பரந்த பரமாத்மா ஒருவன் தலையாய் நின்றியக்குகின் ருன். அக்நியாதி தேவதைகள் அவன் வச மிருப்பவை. இஃது ஆதிதைவிகப் பொருள் முறையாகும், இவ்வாறு வியக்தி (ஒருமை) யும் சமஷ்டி (சமுசம்)யும் ஒரு வகைப்பட்ட ஒழுங்குடையன. பிற இயங்கும் உயிர்த் தொகுதிகள் யாவற்றிற்கும் இம்முறை பொருந்துவன, உயிர்த் தொகுதிகளைக் குறித்து ஈண்டு விளக்கு வது மிகையாமாகலான் விடுக்கிறேம். பிற மக்கட்டொகுதி அல் லது சமுக-தேசிய அமைப்புகளும் இத்துடன் இயைவன. அர சாங்கத்தின் தலைவன் இந்திரன் அல்லது நரேந்திரன், அரசாங்க அதிகாரிகள் பிற தேவதைக ளாவர். சமுக அமைப்பும், அர

சாங்க அமைப்பும் தேவதா அமைப்பிற் கொத்தவைகளேயாம். இஃது ஆதி பௌதிகப் பொருள் முறை. ஈண்டு பூதங்களாவன உயிர்த் தொகுதிகளாம்.

சுருங்கக் கூறின், ஒருமைக் கண்ணும் சமூகத்தும் உலகத்தும் முறையே இந்திராதி தேவதைகள் தத்தம் அமைப்பானும் ஒழுங்கானும் ஒரு தன்மைப் பட்டனவாம். அத்யாத்மிக முறையில் ஆன்ம சக்தியால் கண் காது முதலிய புலன்களும பிற உறுப்புக்களும் தொழி லாற்றுகின்றன. ஆன்மாவின் உதவியின்றிக் கண் காது முதலிய புலன்கள் தொழில்பட மாட்டா. ஆதி பௌதிக முறையில் அரசனல் யாவும் ஆளப்படுகின்றது. அரசனுணையின்றி அதிகாரி யெவனும் தம் போக்கில் யாதும் செய்வதற்கியலா. அதி தெய்விக முறையில் பரமாத்மாவின் ஆற்றலானன்றிக் கனல், ஞாயிறு, மதி முதலிய தேவதைகள் வினையாற்றற்கியலாது வலி யிழந்தா ராவர். இம் மூவகைத் துறைகளிலும் ஒரே தன்மைப் பட்ட நியதியே அமைந்து கிடத்த லோர்க.

இதுவே தேவதைகளின் அடிப்படையான தத்துவம். முதலாவது அத்யாத்மிகம், இரண்டாவது அதிபௌதிகம். மூன்றுவதாகிய அதிதைவிக முறை சுதந்திரமானது. முத லிரு முறைகளிலும் அறநெறிகள் வகுத்துரைக்கப்படும், வேதங்களில் வகுக்கப்படும் அறநெறிகளோடு இத் தேவதைகளேயும் கலந்து ஒன்றுபடக் கூறப் படுகின்றன. ஆதிதைவிக முறையாக வருணிக்கப்படும் அறவுரைகள் வழி வழியாக வழக்கத்திற்குக் கொண்டுவரத் தக்கனவாம். அறநெறிகள் மனிதனெருவனுக்கும் சமூகத்திற்கும் ஒத்த நலன் பயப்பதாக விருக்க வேண்டிய முறை பற்றியே உணர்த்தப்படுகின்றன. மறை மொழிகளின் பொருள் நுட்பமும் தேவதைகளின் உட்கருத்தும் புலப்படுத்திட முதற் காரணமாகிய இக் கற்பனைகளை உள்ளத்தில் நன்கு பகுத்திடல் வேண்டும். பிறவகையில் இந்திராதி தேவதைகட்கு வடிவங்கள் கொள்ளுத லாகா. இதற்குறு சான்றாகக் கீழ்வரும் மந்திரத்தினை ஆராய்க,—

தேவதைகளின் அத்யாத்மிகப் பொருள்.

வ்ருஷெஷா அக்நி : ஸமித்யதெ அஸ்வொ ந தேவ-வாஹந :

இருக்குவேதம் III, 27, 14.

'ஆற்றல் மிக்க அனல் தேவர்களின் ஊர்தி வடிவான குதிரை யொப்பக் கொழுந்து விட்டெரிகின்றது.' தேவதைகளின் வாகனமாகிய குதிரை போன்று இவ் வலிமிக்க கனல் நிலவுகின்றது. இக் கனலே தேவதைகளின் ஊர்தி யாகும்.'

அத்யான்மிக முறையில் தேவதைகள் புலன்களும் உறுப்புகளுமாம். புலன்களின் ஊர்தி உள்ளம். எனவே தேவதை

களின் வாகனமாகிய குதிரை ‘உள்ளம்’ ஆகின்றது. ‘வ்ருஷா அக்நி’ தேவதைகள் அல்லது புலன்களின் தலைவன் ஆன்மா, இவ்வகையாக மேற்குறித்த 'மந்திரத்தின் கருத்தாவது—‘புலன்களை இயக்கும் உள்ளம் எவ்வாறு எழுச்சி பெற்றிருக்கின்றதோ, அவ்வாறே ஆற்றல் மிக்க ஆன்மாவும் ஒளிபெற்று மிளிர்கின்றது.’ என்பதாம். ‘ஒரே ஆன்மாவுக்கு அக்நி முதலிய பல நாமங்களுண்டு’ என்பது இருக்குவேதக் (I, 174, 47) கருத்து. இதற்கிணங்கவே வைதிக மொழியாக்க முறையில் அக்நி முதலிய சொற்கள் ஆன்ம தத்துவமொன்றை உணர்த்துவ தாகும். இதனுன் அக்நி யென்னும் மொழி ஆன்மதத்துவக் குறிப்புச் சொல் லென்பதில் ஐயமின்று. இன்னும்,

ஸம் வீதஸ்வ மஹாம் அவி ஸோசஸ்வ தேவவீதம்

இருக்கு வேதம். I, 36, 9.

‘நீ தேவதைகளுக்கு நற்காப்பாளனும் உயர்ந்தவனுமாகின்ருய். நீ ஒளி வீசி நிலவுகின்ருய். இம் மந்திரத்தின் அத்யான்மிகக் கருத்தாவது—ஆன்மா புலன்களையும் உறுப்புக்களையும் பரிபாலித்துக் காக்கின்றது. ஆன்மா சிறந்த ஆற்றலுடையது. அது புலன்களொடு கலந்துறையத் தக்கது. அதாவது இந்திரியங்கள் வசிக்கும் தேவசபையில் வீற்றிருந்து புலன்களை ஆட்சி புரிந்து காப்பது என்பதாம்.

ஸம் தேவை : சோபதெ வ்ருஷா கவிர்யோநாவதி ப்ரிய :
வ்ருத்ரஹா தேவ வீதம :

இருக்குவேதம் IX, 25, 3.

‘விருத்திரனை அழிப்பவன், தேவர்களைக் காப்பவன், ஆற்றலுடையான், அறிவாளி. தன்னிலயத்து நின்று தேவர்களுக்கு நல்லொளி தருபவன்.’

தீய எண்ணங்களாகிய பகைவர்களை அழிக்கின்றவனும், புலன்களின் ஆற்றலை நன்னிலைப் படுத்திக் காக்கின்றவனும், வலிமையுடையானும், அறிஞனும், அன்பும் மிக்க ஆன்மா புலன்களுடன் கலந்து தனது நிலயத்து நின்று ஒளி வீசுகின்ருன். என்று இம்மந்திரக் கருத்தினை உணர்க. இதன்கண் ‘கவி’ ‘ப்ரிய’ முதலிய சொற்கள் அத்யாமிகக் கருத்தில் சிறந்த பொருள் பயப்பவை. விருத்திரனென்பது ‘சூழ்ந்து நிற்கும் பகைவ’ னென்று பொருள்படும். அத்யாத்மிகக் கருத்தில் சூழ்ந்து நிற்கும் பகைகளாவன தீய சிந்தனைக ளாகும். புலன்களின் ஆற்றலொடு சீவான்மாவின் ஒளி பரவி நிற்கின்றது. இம் மந்திரம் ‘பவமான சோம’ தேவதையின் சூக்தத்தில் கூறப்படுகின்றது. இதனைச் சரதமாக பவமான சோமக் கொடியின் சாறு என்று கொள்வர். இம்மொழி

சோமச் சாற்றினைக் குறிப்பினும் அத்யாத்மிகக் கருத்தில் சீவான் மாவையும் உணர்த்தி நிற்கின்றது. இஃது (பவமான:) தூய்மைப் படுத்துகின்ற (சோம=ஸ+உமா) காக்குந் திறனொடு உறையும் ஆன்மா என்று பொருள் படும். ஆன்மா யாவற்றினு முயர்ந்த தூய பொருளாகலான் 'ரஸம்' சத்து என்று கூறுதலு மமையும். பரமாத்மாவை 'ரஸ' 'ஏக ரஸ' முதலிய மொழிகளால் சிறப் பிக்கப் படுகின்றமையான், அவை சீவான்மாவுக்கும் பொருந்துவன வாம். இவ் வகையாகப் பவமான சோம என்பது அத்யான்மிகக் கருத்தில் இம் மந்திரத்திற் குறித்தாகின்றது. 'உமா' சீவான் மாவின் உண்மைச் சக்தியாகும். இச் சக்தி ஆன்மாவுடன் இடை பிரியாது கலந்துறைகின்றது. உமையின்றிச் சிவன் யாண்டும் உறையா னென்பது இக் கருத்துதானே யாகும். இம் மந்தி ரத்திற்குரிய தேவதை பவமான சோமனுதலால் சீவான்மாவிற் குரிய சிறந்த வருணனையாகக் கொள்ளுதல் வேண்டும். 'ப்ரிய, கவி' முதலிய சொற்கள் சோமச் சாற்றினைக் குறித்து நிற்காமை காண்க.

யொ ஹோதாதாஅ அஸீத் ப்ரதமொ தேவஜுஷ்ட:

இருக்கு வேதம் X, 88, 4.

'தேவர்களால் தொழத் தக்க முதல்வனுக இருந்தான்.' இதில் 'தேவ ஜுஷ்ட' வென்பது சிறந்த பொருள் பயப்பது. மனித வாழ்க்கை சிறந்ததோர் மாபெரும் வேள்வி. இவ் வேள்வி யில் உறங்கியும் விழித்து மிருக்கின்ற புலன்கள் யாவும் தொழத் தக்க கண்கண்ட தேவதைகளாகும். சீவான்மா இவற்றின் மகிழ்ச் சிக்காக அவிஸ் (ஏற்ற உணவு) அளிக்கின்றது. இதனை;

தத்வா அதர்வண: சிரொ தேவ கோச: ஸமுப்ஜித:
தத் ப்ராணொ அபி ரக்ஷதி சிரொ அந்நமதொ மந:

அதர்வ வேதம் X, 2, 27.

'அதர்வத்தின் சிரசு தேவதைகளின நற்காப்பிற்குரிய கரு வூலமாகும். பிராணன் அத்தலையினைக் காக்கின்றது. உணவும் உள்ளமும் காக்கின்றது.

அசைவின்றி நிலைபெற்று நிற்பதற்கு அதர்வமென்பர். உள் ளம் முதலியவற்றை ஒருநிலைப் படுத்துகின்றயோகியை 'அ-தர்வா' என்றழைப்பர். இந்த யோகியின் தலை தேவர்களின் கருவூல மாகின்றது. இத்தகைய வருணனையால் தேவதைகளின் கருத்து விளக்கப்படுகின்றது. சிரசிலிருக்கின்ற புலன்கள் யாவும் ஈண்டு தேவர்களாவர். இரு கண் இரு காது இரு நாசித்துளை நாக்கு என் னும் எழு தேவதைகள் தலையிலிருக்கின்றன. இவற்றின் கழகம் (தேவ சபை) மூளை. ஆன்மாவின் அவைத்தலைமையில் இவை

யாவும் தங்கட்குரிய கடமைகளை யாற்றுகின்றன. உடலைச் சார்ந்த புலன்களை தேவரென்று குறிப்பதில் சிறிதும் ஐயமின்று. மேற் குறித்த இவை 'ஆஜாந-தேவதை' களாகும். இவற்றின் வேருக விளங்கும் பிறவற்றைக் 'கர்ம, தேவ' ரென்பர். இருகை இரு கால் பாயு உபத்தம் வாய் இவ் வேழும் கர்ம தேவதைகள். இவற் றைத் தவிர உடல் முழுதும் பரவி நிற்பது துவக்கு இந்திரியம். ஈண்டு மேற்கூறியவாறு கர்மதேவதையை விட ஆஜான தேவதை பலமடங்கு உயர்வுடைய தென்பது விளக்கமாதல் காண்க. இவ் வகையாகச் சதபதம் பிராஹ்மணக் கதையின் விளக்கம் வேத மந் திரக் கருத்தை உற்று நோக்கப் புலனுகின்றது. அத்யாத்மிக முறையில் இத் தேவதைகளின் தன்மை புலப்படாதிருப்பினும், இடர்ப் பாடுடையதாகக் காணப்படினும், இவ்வுரையால் அவை மிகத் தெளிவுபடுதல் காண்க. இவ்வகைப்பட மறை மந்திரங்க ளின் உட்கருத்துக்களை அத்யான்மிக முறைப்படப் பொருளாய்ந்து காண்டல் எத்துணைச் சிறப்புடைய தென் றோர்க. இக் கருத்திற் கிணங்க பிராமண நூல்களின் மேற்கோள் சிலவற்றை எடுத்துக் காட்டுவாம்.—

| | | |
|---|---|---|
| ப்ராணோ வை ஸமித : | ஐதரேய ப்ரா. | II, 4. |
| ப்ராணோ வை தநூநபாத். | ஷே | ஷே |
| வாக் வை த்வஷ்டா. | ஷே | ஷே |
| மனோ வை யக்ஞஸ்ய மைத்ரா வருண : | ஷே | II, 5. |
| வாக் யக்ஞஸ்ய யோதா. | ஷே | ஷே |
| ப்ராணோ வை மருத : | ஷே | III, 16. |

இவற்றின் பொருள் வெளிப்படை. இம்மாதிரியாகப் பிரா மண நூல்களிலும் தேவதாதிகளை அத்யான்மிக முறையில் பொருள் கொள்ளத் தக்கவாறு சுட்டப்படுகின்றன. பிற கருத் துக்களும் தக்கபடி அமைந்திருப்பின் சிறப்பாக அத்யான்மிக முறைப்படவே வேத மந்திரங்களுக்கும் பொருள் காணப்படல் வேண்டும். இதனை,

யெ புருஷெ ப்ரஹ்ம விதுஸ்தெ விது : பரமேஷ்டினம்

அதர்வ வேதம். X. vii, 17

'எவ் அறிஞன் புருடனிடத்துப் பிரஹ்மத்தை உணரு கின்றனே, அவன் பரமேஷ்டியை அறிகின்றான்' என்ப தால் சீவான்மாவின் உண்மை நிலையை உடலினின்றே காண் பவன், பரமாத்மாவின் உண்மை நிலையை உலகிடைக் காண் கின்றான் என்பதாகும். இவ்விரு வகைப் பொருட்களும் ஒத் திருத்த லோர்க. சீவான்மா புலன்களாதி தேவதைகளோடு யாக்கையில் உறைகின்றது, அவ்வாறே பரமாத்மா சூரியாதி தேவதைகளோடு உலகி லுறைகின்றான். பிறப்பற்ற சீவான்

மாவிற்கு இவ் வுடலிருப்பது போலவே, உடலில்லாப் பரமாத்மனுக்கு இவ் உலக மனைத்தும் உடலாய் விளங்குகின்றது. எனவே, தன்னுடலகத்துத் துருவிக் காண்பவன் உலக வியாபகனுகிய பாமாத்மனையும் காண்ட லெளிதா மென்பதே இம் மந்திரக் கருத்து.

## முப்பத்து மூன்று தேவர்கள்.

*யஸ்ய த்ரயஸ் த்ரிம்சத் தேவா அங்கெ ஸர்வே ஸமாஹிதா:*
*ஸ்கம்பம் தம் ஹ்ப்ரூஹி கதம: ஸ்விதேவ ஸ:*
*யஸ்ய த்ரயஸ் த்ரிம்சத் தேவா அங்கெ காத்ரா விபேஜிரெ*
*தாந் வை த்ரயஸ் த்ரிம்சத் தேவாநேகே ஹ்ப்ரஹ்ம விதொ விது:*

அதர்வ வேதம். X, viii, 13-27.

'முப்பான் மூன்று தேவதைகள் யாவ னுடலில் நிலவுகின்றனவோ, முப்பான் மூன்று தேவதைகள் உறுப்புக்களாக யாவனுடலில் இலங்குகின்றனவோ, அவை யாவற்றிற்கும் அடிப்படையாய் நிற்பது இக் கம்பம்.' இத் தேவதைகளை மெய்யறிஞன் (பிரஹ்ம ஞானி) உணருகின்றான்.' இக்குறித்தவாறு ஒருவன் தன்னுடலில் முப்பத்து மூன்று தேவதைகளையும் காணப்பெறல் வேண்டும். ஏக காலத்துத் தம்முடலில் முப்பத்து மூன்று தேவதைகளின் கற்பனைகளும் தெளியப் பெறின், புறவுலகத்துத் தேவதைகள் யாவற்றையும் தாமே உணரப் பெறுவான். தம்முடலில் இத் தேவதைகளைக் கண்கூடாகக் காணுதல் கூடும். வேத மொழிகளால் தேவதைகளை "இந்திர! நீ இங்ஙன மியற்றுக. அக்நி! நீ தேவர்களுடன் வருக." என்பன வாதியாக முன்னிலைப்படுத்திக் கூறப்படுகின்றன. தேவதைகளோடு உரையாடும் மொழி மறைகளி லுளவாகலின் அத்யாத் மிக முறையில் பிரத்தியக்ஷ தேவதைகளை வேதங்களில் குறிக்கப்படுகின்றன. அதனை யொப்பு நோக்கியும் பிற முறைகளிலும் பொருளுண்மை காண்டல்வேண்டும். அத்யான் மிக முறை சிறப்புடைய தென்று குறிக்கப்படுதலால் பிற வகையில் பொருள்கொள்ளுதல் இழிந்தன வாகா. அத்யான்ம முறையில் பொருள்கொள்ளுதலால் ஆன்ம உயர்வு எத்துணைய வென்பது புலப்படும். மறைகளுக்கு அத்யான்ம முறையில் பொருள் காண்கின்ற அறிஞன் தன்னைத் தாழ்ந்தவன் இழிந்தவ னென்றெண்ணுது தமது ஆற்றலை அநுபவத்தில் கண் டுணருவான்.

*அஹம் ருத்ரேபிர் வசுபிச் சராம்யஹ மாதித்யை ருதவிச்வ தேவை.*
*அஹம் மித்ரா வருணேபா பிபர்ம்யஹ் மிந்த்ராக்நி அஹ மஸ்வி [நோபா.*

இருக்கு வேதம். X, 125, 1.

# வைதிக தேவதைகள்

'உருத்திரர் வசுக்கள் ஆதித்தியர் பிற தேவதைகளோடும் யான் செல்கின்றேன். மித்திரன் வருணன் இந்திரன் அக்நி இரு அஸ்விஷிகளோடும் யான் ஆட்சி புரிந்து இன்புற்றுறைகின்றேன்.

இம்மறை மந்திரக் கருத்தின்படி இத்தேவதைகள் யாவற்றை யும் தமது உடலில் முதற் கண் காணப்பெறல் வேண்டும். இத் தேவதைகளைத் தம்முடம்பில் காண்கின்றவன் பரமான்மாவிடத் தும் இவர்களைக் காண்கின்றான். நமது ஆன்மாவுடன் வசு உருத்தி ராதி தேவதைகள் யாவும் இருக்கின்றன. மித்திரா வருணன், அசுவினி குமாரர், இந்திரன் அக்நி முதலிய தேவதைகளை நமது ஆன்மாவில் வளர்த்துக் காக்கப்படுகின்றன. இம் மந்திரக் கருத் தினை அநுபவத்தில் கொணர்தல்வேண்டும், இதனை அநுபவத்தில் தெளியக் கொணர்கின்றவன் மெய்யறிவினனாக மாபெரும் பிர மத்தினிடத்தும் சமஸ்த தேவதைகளையும் தத்தம் நிலையில் உணர் கின்றான்.

இனி, நம்முடம்பில் இத்தேவதைகளைக் காண்க. (1) நமது பிராணன் உடம்பி லுறையும் உருத்திரன் (2) சொல்லாற்றல் அக் கினி (3) மூச்சு விடுதலும் உள்வாங்குதலும் இரு அசுவினி குமாரர் (4) மனது இந்திரன் (5) நிலம் புனல் எரி முதலி யன வசுக்கள். இவ்வாறே பிற தேவதைகளு முளர். எல்லாத் தேவதைகளின் நிலையினையும் அத்யான்மிக முறைபடக் கொள் ளாதவரையில் யாவற்றையும் நிர்ணயித்தல் இவன் அரும்பாடா கும். ஈண்டு இத்துணை விரிவுபட விளக்கவேண்டுவது யாதெனின், இம்முறை பற்றிக்கொள்ளும் பொருளால் நமது ஆன்ம சக்தியை வளர்த்தற் கேது வாகின்றமையா னென்க. தமது பெருமையை உணதற்குச் சிறந்த கருவியும் ஆகின்றது. தம் முயர் வுணர்ந்து தம்மாற்றல் பெருக்கவேண்டுவது சிறந்த கடமையு மாகும்.

இறுவாய்'.

அக்நி, இந்திரன் முதலிய சொற்கள் சீவான்மாவின் பரியாய நாமங்களாயிருப்பினும், வாக்கிந்திரியம் உள்ளம் ஆதியவற்றையும் குறிக்கின்றன வென்பதை ஈண்டு புலப்படுத்த வேண்டியதாகின் றது. மனமாதிய வற்றால் ஆன்ம வலி பரவுகின்றது. ஆகலான் ஆன்மாவின் பெயரினைப் பிற புலன்களின் பெயராகவும் கொள்ளப் படுகின்றன. இத்தகைய மொழியாக்க வியல்பான் பல பண்டி தர்கள் மயக்கமடைதலும் கூடும். ஆயின் ஒரு முறை ஆன்ம சக்தி யைப் பிற ஆற்றல்களோடு பொருத்திக் காணப்பெறின் எவ்வித வேற்றுமையுந் தோன்றமாட்டா. கண்ணின் ஆற்றலைத் தமது ஆன்மாவால் அநுபவித் துணர்கின்றவன் தமது ஆன்மாவைக் கண்ணிற்குக் கண்ணுவா னென்றும் கழறுவன். இந்நிலையில்

கண்ணைக் குறிக்குஞ் சொல் ஆன்மாவையும் உணர்த்துகின்றது. இவ்வாறே கதிரவ னொளி பரமான்மாவி னடியாகக் கிடைக்கப் பெறுவதென் றுணருகின்றவன் கதிரவனுக்குக் கதிரவன் அப் பரமனென்று சாற்றுவன். இந்நிலையில் சூரியனை யுணர்த்தும் மொழி இறைவனுக்கு மாயிற்று, இங்ஙனமே அக்நி இந்திராதி மொழிகளையுங் கொள்க. இவ்வகையாக அன்பர்கள் யோகநெறி பற்றித் தம் யாக்கையில் மூதற்கண் தேவதைகளை அநுபவமாகக் காணப் பெறின் பரமான்மாவிடத்து தேவதைகள் யாவற்றையும் எளிதில் காணமுடியும்.

தேவதைகளின் வடிவம் இவ்வாறு தெளிதலால், வைதிக தேவதைகளின் உருவகம் மனதில் படிந்துவிடும். வைதிக தேவதைகளின் கற்பனை உள்ளத்தில் பதிந்துவிடின் மறைகளையும் பிராஹ்மணங்களையும் படித்தறிதல் எளிதாகும். மேற்குறித்த பிராஹ்மண நூல்களினின்று காட்டப்பெற்ற அணிந்துரைகளும் காதைகளும் இவ்வகையாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இது மட்டுமன்று, புராண கதைகளும் நடை பெறத்தகாதனவாகக் காணப்படினும் பின்னர் தேவதைகளின் கற்பனைகளாகிய உருவக அணியின் வாயிலாகத் தெளிவுறப் புலப்படும்.

வைதிக கற்பனைகள் புராணங்களிலும் பிற அறநெறி யுரைக்கும் காதைகளிலும் பிரதிபலித்து வருகின்றன. உருவத்தி னியல்பு திறம்பட உணரின் பிரதி யுருவமும் எளிதில் புலனும். ஒரு முறை வைதிக தேவதைகளின் கற்பனை மனதிற் படிந்து விடின் உலகத்துள்ள காதைகளின் நுண்பொருள் எளிதில் துணியக் கூடும். ஆகலின் வேதங்களினின்று ஒவ்வொரு தேவதைகளையும் தேவதைகளின் சமுகத்தையும் நுணுகி ஆராய்தல் இன்றியமையாததாம்.

மயக்கத்தால் இவ் விடயம் புலனுவ தன்று. மன அமைதியுடன் நடுநிலை திறம்பாது இக்காரியத்தில் பன்முறை முயலுதல் வேண்டும். இது வரையிலும், கூறியவற்றால், வேதங்களுக்குத் தக்க மெய்யுரை காண்பதில் எத்துணை அரும்பாடுள வென்பதுணர்க. தேவதைகள் முழுவதையும் தம்முடலில் அநுபவித்துணர எவ்வகை முறைகள் ஆளப்படுதல் வேண்டுமென்றறிவது மிக அருமையாக விருக்கின்றது. ‘எப்புருடன் ப்ரஹ்மத்தைக் காண்கின்றனே அவன் பரமேட்டியாம் பரமாத்மனை உணருகின்றன்.’ தொழுவத்தில் பசுக்கள் உறைவது போன்று இப்புருடனிடத்துச் சகல தேவதைகளும் உறைகின்றன’ என்று அதர்வ வேதத்தில் தெளிவுபட விளக்கப்படுகின்றது. இதனை அநுபவத்தி

லுணரத் தக்க நெறி இதுவென்று எச்சமயம் புலனுகின்றதோ அவ்வமயமே வேதத்தின் பொருள் நுட்பம் விளக்கமாகின்றது. பின்னர் எவ்வித ஐயப்பாடும் நிகழமாட்டா. ஆகலான்; இவ்வுரையினைக் கடைப் பிடித்தல் யாவர்க்கும் இன்றியமையாதது.

முப்பத்து மூன்று தேவதைகள் மட்டிலுந் தான் உண்டென்பதன்று. முப்பத்து மூன்று தேவதைகளும் ஒரு கூட்டம். இதைத் தவிர வேறு பல தேவதைகளு மிருக்கின்றன. அவை இவற்றின் வேறுபட்டவை. எல்லாத் தேவதைகளின் மொத்தத் தொகை முப்பத்து மூன்றினும் பன்மடங் கதிக மானவை. வேதமந்திரங்களில் அநேக தேவதைகளின் பெயர்கள் வருகின்றன. அவை யாவற்றையும் ஒன்று சேர்ப்பின் நூற்றுக் கணக்காகக் காணப்படும். தேவதைகளைக் குறித்தாராய்வதில் இவை யாவற்றினியல்பு முணர்தல் வேண்டும். இவற்றைத் தக்கவாறு தம்முடம்பில் முதற்கண் காணப்பெற்றுப் பின்னர் புறவுலகில் காண்டல் வேண்டும். இம்முறையாக எஞ்ஞான்று உண்மைகள் தெளியப் பெறுமோ, அக்காலத்து வேத வுரை விளக்கம் பெறும். ஆகலான், அறிவு விரும்பும் நன்மக்கள் இந்நிகழ்ச்சியில் தக்கவாறு முயலுதல் வேண்டு மென்று பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

---

## ஓர் அதிசயப் பிறவி.

இலங்கையின் உள்நாட்டுப் பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு குழந்தை பிறந்தது. பெரிய உருவம். ஆண் சிசு. ஒரு தலை. இரு உடல், ஒன்று சிறிது. கழுத்தின் கீழ்ப்பாகத்திலிருந்து மற்றொரு உடல் கிளம்பி யிருந்தது.

இரண்டு கால்களும், கரங்களும் அச்சிறு வுருவுக்கிருந்தன. அச்சிறு உருவின் விலாவிலிருந்து, பெரிய சிசுவின் இடக்கரம் முளைத்திருந்தது. இதை இரட்டைக் குழந்தை ஒன்றிப்பிறந்த அதிசயப் பிறவி யென்பர். இது பிறந்து சிறிது நேரத்தில் மாணமாகி விட்டது. ஏராளமான ஜனங்கள் போய்ப்பார்த்தார்கள். கலிகால நவீனங்களில் இதுவு மொன்று.

# பா னு பா ய்.

X

(ஸ்ரீமான் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

337-வது பக்கம் (தொடர்ச்சி.)

அநந்தனுக்கு பிழைத்திருக்க விருப்ப மில்லை. குரூரனை அரசனோடு பகைகொண்ட பின்னரும் உயிரோடிருத்தல் பயனற்ற தாகுமென எண்ணினான். அவன், கோவணத்திற்குந் தரித்திர னான பிச்சைக்காரனைப்போல, ஈராண்டுகளாக வீடு வீடாக அலைந்து திரிந்தானாயினும், அவனால் தன் தாய் நாட்டிற்காக ஒன்றுஞ் செய்யக்கூடவில்லை. படானியர், தங்கள் ஆளுகைக்கு எவ்வித பங்கமு முண்டாகாமலே ஆட்சிபுரிந்து வந்தனர். அவன், தன்னாலான முயற்சிசெய்தும், தன் தாய் நாட்டாரிடத்தில் எவ்வளவு ஊக்கத்தோடு முறையிட்டும் பயன்படவில்லை. படானியர் செய்துவரும் கொடுமை சிறிதும் அடங்கவில்லை. தன்னுடைய சகோதர சகோதரிகளுக்குள்ளே சச்சரவு உண்டாவதையும், அவரவர்களுக்குவரும் வருவாயையும், அவரவர் இருக்கும் நிலைமையையுங் கண்டு ஒருவரை யொருவர் விரோதிப்பதையும் பார்த்தான். தேசத்தில் தனவந்தர்கள் தங்கள் செல்வங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. இல்லுறை தெய்வங்களெனச் சொல்லப்படும் பெண்கள், தங்கள் கற்பைக் காத்துக்கொள்வது கடின மாயிற்று. சனங்கள், தங்கள் வீடுகளையும், பயிர் விளை நிலங்களையும், மற்ற எந்தப் பொருள்களையும் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் பயந்திருந்தனர். இன்னும், அவன் இதயம் பிளந்துபோகும்படியான காட்சிகளைக் கண்டான். அவன் மனங்கலங்கிப் பைத்தியக்காரனைப்போல ஓடினான். எல்லா வசைமொழி கட்கும் மனம் பொறுத்தானாயினும் காலின் கீழ் நசுக்குண்டு கிடக்குந் தன் தேச சனங்களுக்கு ஒன்றுஞ் செய்யக்கூடவில்லை. அதனால் அவன் மனம் புண்ணாகிப் பொறுக்கமுடியாமல் துய ருழந்தான்.

இரக்க மற்ற நெஞ்சினராகிய படானியர் செய்யுங் கொடுமைக்குச் சிறிதும் எதிர்ப்பின்றிச் சனங்கள் புலியைக் கண்ட மானைப்போல அடங்கியிருந்தனர்.

இவற்றை யெல்லாங் கண்ட அநந்தன், வியர்த்தமான உயிரைப் போக்கிக்கொள்ள எண்ணினான். அவ்வாறு எண்ணின அக்கணமே அவனுக்குப் பானுபாயின் நினைவு வந்தது. "பானுபாய் அநந்தனை மறந்தனளோ? உண்மையில் அவனை மறந்தேயிருப்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
20357

பாள். குரு தேவரும் இவ்வுலக வாழ்வை நீத்திருப்பார்" என்று தானே சொல்லிக்கொண்டான். இவ்வித எண்ணங்களால் அவன் மனங் கசந்தவனாய், இனித் தான் உயிர் பிழைத்திருப்பதில் பிரயோசனமில்லை யெனத் திட்டமா யுணர்ந்தான். அவ்வித எண்ணம் வந்ததும், அவன் பரிசுத்த கங்கா நதியில் வீழ்ந்து ஆழ்ந்தான். அதனோடு எல்லா முடிந்தன. அவனது நியாயமான தைரியமும், நம்பிக்கையும், நியாயமான அபிமானமும், தாய் நாட்டை மீட்கும் திடமான விருப்பமும் இறுதி யடைந்தன. ஆனால், தெய்வச்செயல் வேறா யிருந்தது.

அவன் நதியில் வீழ்ந்து மூழ்கி மேலே கிளம்பினதும் "ஆண்மை யில்லாதவனே தற்கொலை செய்துகொள்ளுகிறான், மனிதனா யிருப்பவன் அது செய்யான்" என்று ஓர் சத்தம் அவன் காதிற் கேட்டது. அவ்வாறு அவன் கேட்டதும் "ஐயோ! நான் ஒன்றுக்கும் உதவாதவ னாயினேன்" என்று சொல்லி மிக வருத்தத்தோடு நீந்துதற்கு முயன்றான். பெருமூச் செறிந்து நீந்தினான்; ஆனால், அவன் கை கால்கள் ஓய்ந்துபோயின. மிக்க சிரமத்தோடு நதியின் நடுவே நீந்திச் சலத்தின் மேல் மிதந்துகொண்டிருந்தான். நீந்திக் கரைவந்து சேருவதற்கு மிகவும் அலுத்துப்போனான். அவ்வாறு அவன் தவித்துக்கொண்டிருக்கையில், அவனுக்கெதிராக ஓர் ஓடம்வந்தது. அவன் அதன் சுக்கானைப் பற்றிக்கொள்ள முயன்றான். அவனைக் கண்ட ஓடக்காரன் "இதோ திருடன்! இதோ திருடன்!" என்று அவனை அடிக்கப்போனான். அப்போது அநந்தன் உரக்கக் கூவி "ஐயோ! நான் திருடனல்ல, உங்களைக் கும்பிடுகிறேன், கடவுள் முகத்தைப் பார்த்து என்னைக் காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கதறினான்.

உடனே ஒரு மனிதன் ஓடத்தின் உள்ளிருந்து "அவனைத் தூக்கிப் படகி லேற்றிக்கொள்" என்றான்.

படகினுள்ளிருந்து சொன்ன பிரபுவும், படகுக்காரர்களும் வங்காளிய ரல்லர், அவர்கள் பேசுவதினின்று, அநந்தன், அவர்களை அயல் நாட்டின ரென்றுணர்ந்தான். அவர்கள் அநந்தனைப் படகி லேற்றிக்கொண்டனர். அவன் மிகவும் இளைத்து மெலிந்தவனாய் மெல்லிய குரலால் "நான் மூன்று நாளாக ஆகார மில்லாமல் பசியால் வருந்துகிறேன்" என்றான்.

## XI

காலம் எவருக்காகவும் காத்திராது. அநந்தபுரம் நெருப்பினால் வெந்து நீறாகி மூவாண் டாயின.

பானுபாய் இன்னுஞ் சிறு பெண்ணா யிருப்பாளா? அவளுக்கு இப்போது வயது பதினான் காயிற்று. அன்றலர்ந்த மலர் போலும் அழகு மேனியையுடைய யௌவனியாக வளர்ந்து விட்டாள்.

சிரோமணியார் கல்விச்சாலை பழைய கல்விச் சாலையல்ல. பானுபாய் வந்து சேர்ந்தபின்னர் புதிய கல்விச் சாலையாயிற்று.

அவள், பல கல்வித் துறைகளிலுந் தேர்ச்சியுள்ள பெரியாராகிய சிரோமணி பண்டிதரிடத்து வடபாஷையைச் செவ்வனே கற்றுத் தேர்ந்தனள். பண்டிதர் முதலில் அவளுக்குப் பாடங் கற்பிப்பதற்கு விருப்ப மில்லாதிருந்தனர். ஆனால், அவள் கல்வி கற்பதற்குப் பிடிவாத முள்ளவளாயும், மிக்க ஆவலுள்ளவளாயு மிருந்தாள். அவ்விஷயத்தில் அவளுக் கிருந்த விடாமுயற்சியும் ஊக்கமுமே எல்லாத் தடைகளையும் ஒழித்துவிட்டன. அவளுக் கிருந்த புத்திக் கூர்மையையும் புலமையையுங் கண்ட சிரோமணி பண்டிதரன்றி, மற்ற மாணவர்களும் மிக்க வியப்படைந்தனர். சிறு பெண்ணாயிருந்த அவள் இப்போது வீட்டிற்கு எசமானியாகவும், பாடசாலைமாணவர்கட்கு உபாத்தியாயினியாகவும், காண்போர்கண்களைக் கவரத்தக்க கட்டழகு வாய்ந்த கன்னிகையாகவு மிருந்தாள். மாணவர்களும் வீட்டிலுள்ளோரும் அவளை ஒரு பெண் தெய்வமென எண்ணி, அன்போடு கொண்டாடி வந்தனர். மாணவரெல்லோரும், அவளது மேன்மைக் குணத்தையும், அழகின் வீக்கத்தையும், கல்வித் திறத்தையும், கூறிய அறிவையும், பெருமை பாராட்டாத தன்மையுங் கண்டு மெச்சிக்கொள்வதில், ஒருவரோடொருவர் வாதாடுவா ராயினர். அவளைப் புகழ்ந்து பேசுவதே அவர்களுக்கு இன்பமாகும். அவள், அழகிலும், ஒழுக்கத்திலும், கடவுள் பக்தியிலுந் தெய்வப்பெண்ணை ஒத்திருந்தாள். அவளது கல்விப் பயிற்சியில் தெய்வத்தன்மை பொருந்தியிருந்தது. அவள், விவேகத்தினாலும் ஞானத்தினாலும் பாடசாலை முற்றும் புகழ் பெற்றிருந்தாள். அவள் பாடசாலையில் மாணவர்களுடன் சம்பாஷிக்கையில், சித்திரப் பொற்பாவை பேசத் தொடங்கினால் எப்படியோ அது போன்றிருக்கும். அவளது சிவந்த வாயினின்று வரும் ஒவ்வொரு கட்டளையும் உடனுக்குடன் கேட்கப்படும்.

அநந்த ராய், சிரோமணியார் வீட்டை அகன்ற பிறகு, அவர் வீட்டிற்கு ஓர் புதிய மனிதன் வந்தான். அவன், அநந்தராய் வீட்டுப் பழைய வேலைக்காரனான சுதரிசன தாஸ். அவனுக்கு வயது 50-க்கு மேலிருக்கும்; ஆனால், அவன் பலசாலியாகவும் தேகக் கட்டுடையவனாகவும், ஆரோக்கியமுள்ள தேக முடையவனாகவு மிருந்தான். அவன், பானுபாய்க்கு ஆகவேண்டிய காரியங்களை

யெல்லாம் உடனுக்குடன் செய்தும். அவனுக்கு உதவியாயிருந்து, சிரோமணியார் வீட்டு வேலைகளையெல்லாம் நிருவகித்தும் வந்தான். தினந்தோறும் வேலை பார்த்துவரும் நேரங்களில் இடை இடையே அவர்களிருவரும் எதைக்குறித்தோ ஆலோசனை செய்து வருவார்கள். ஆனால், அவர்கள் இரகசியமாகப் பேசுவது இன்னதென்று ஒருவரும் அறியார்.

சிரோமணியார் தமது வீட்டுக் காரியங்களைப் கவனிப்பதில்லை. எல்லாக் காரியங்களையும் அவரது மனைவியாரே நடத்தி வந்தனர். பானுபாய் வரவர அக் காரியங்களையெல்லாந் தானே யேற்றுக்கொண்டு, மிக்க விமரிசையாகப் பார்த்துவந்தாள். பிறகு சிரோமணியார் வீட்டில் ஆகவேண்டிய காரியங்களுக்கெல்லாம் அவளே பொறுப்புள்ளவளானாள். அவர்கள் அவள்மீது நம்பிக்கை வைத்துச் செய்ததில், யாதொரு காரியத்தவறும் உண்டாகவில்லை. குடும்பக்காரியங்கள், பாடசாலை விசாரணைகள் முதலிய எல்லாவற்றையும், அவள், ஆசிரியருக்கும் அவர் பத்தினிக்கும் திருப்தியுண்டாகும்படி செய்து வந்தாள்.

வரவரப் பாடசாலையில் மாணவர்களின் தொகை அதிகரித்தது. காலு சர்தாரும் அவனது கூட்டத்தாரும் அடிக்கடி அங்கு வந்து விசாரித்துப்போகத் தொடங்கினார்கள். அதனால், சிரோமணியார் வீட்டில் கனக்கூட்டம் முன்னையினும் அதிகமாயிற்று. அவ்வாறிருந்தும், வீட்டுக் காரியங்களுக்கு எவ்வித மட்டுப் பாடுமின்றி அவள் ஒழுங்காக நடத்திவந்தாள். அவளுக்கு வீட்டுக் காரியங்களிலிருந்த சிரத்தையும் அன்பும் எல்லோருக்குந் திருப்தியை யுண்டு பண்ணிற்று. இவற்றையெல்லாம் பார்க்கச் சிரோமணியார் பெரிதும் மகிழ்ச்சி யடைந்தனர். அவர் பெரும்போக நுகர்ச்சியையும் சுகாநுபவத்தையும் விரும்பினவரல்ல. அவர், தம் வீட்டிற்குப் பலர் வந்து வயிரார வுண்டு போதலைக் கண்டு பேரானந்தங் கொள்வர். இவையாவும் அவர் மனத்திற்குத் திருப்தியைத் தரினும், "இப்பெருஞ் செலவுக்குப் பானுபாய்க்குப் பணம் எங்கிருந்து கிடைக்கின்றது" என்று கலக்கமுற்றனர். பானுபாய் வந்தபின் பின்னரும் வருவாயும் அதிகப்படவில்லை. ஆனால், வீட்டிற்குச் செலவாகுந் தொகையோ முன்னைக்கு இப்போது அதிகமாய் விட்டது.

பானுபாய்க்கு இந்தத் தொகை யெங்கிருந்து வருகின்றது?" என்ற ஐயம் அவர் மனத்தை விட்டகலவில்லை. அதனைப்பற்றிப் பானுவை நேரே கேட்பதற்கு அவர் மனம் எழவில்லை.

ஒரு நாள், அவர், சுதரிசனைத் தனியே யழைத்து "சுதரிசனா! நீ பானுவுக்கு எல்லா உதவியுஞ் செய்து வருகின்றாய், ஆகையால்,

உனக்குத்தான் தெரியும். அவனுக்கு இவ்வளவு பணம் எங்கிருந்து வருகின்றது?'' என்று வினவினர்.

"ஐய! அதனை நீங்கள் கேட்பதால் உங்களுக்கு யாது பயனுண்டாகும்?'' என்றான் சுதரிசனன்.

"அப்பா! அதன் உண்மை தெரியுமட்டும் என் மனம் அடங்காது'' என்றார் சிரோமணியார்.

"ஆயின், கேளுங்கள். எனது எஜமானருடைய சொத்துக்களையெல்லாம் பிறர் அறியாவண்ணம் மறைத்து வைத்தேன். அவருடைய பயிரிடுங் குடியானவர்கள் தீர்வை கட்டிவருகிறார்கள். அந்தப் பணத்தையே நாங்கள் செலவிட்டு வருகிறோம்'' என்றான் சுதரிசனன்.

அதனைக்கேட்ட சிரோமணியார் நடுக்கமுற்று "நாம் இன்னொருவர் பணத்தையா செலவிடுகிறோம்? எல்லாப் பணமும் அநந்தனுக்குச் சொந்தமாகும். அதனை நாம் செலவிடுதற்கு நமக்கு உரிமையில்லையே'' என்றார்.

"ஐய! அதனை நாம் செலவிட வில்லையே. பானுபாயன்றோ செலவிடுகிறாள். அந்தப் பொருளின்மேல் அவளுக்கு எல்லா உரிமையு முண்டு'' என்றனன்.

அதனைக் கேட்டதும் சிரோமணியார் ஒன்றும் பேசாது நின்றனர். பிறகு சுதரிசனன் செல்லற்கு யத்தனித்தபோது, அவனைப் போகவிடாமல் நிறுத்தி "நான் இன்னொன்று கேட்கின்றேன் சொல்'' என்றார்.

"சொல்லக் கோருகிறேன்'' என்றான்.

"நீ என் கூட்டமான சனங்களைச் சேர்க்கின்றாய்?''

"நான் சேர்க்கிறதில்லை. பானுபாய்தான் சேர்க்கின்றாள்.

"ஏன் அப்படிச் சேர்க்கின்றாள்?'' என்று சிரோமணியார் வியப்புற்றுக் கேட்டார்.

"அஃது பானுபாய்க்குத் தான் தெரியும்'' என்றான்.

பின்னர் சிரோமணியார் மேலே ஒன்றுங் கேளாது பெருமூச்செறிந்து வாளா விருந்தனர். சுதரிசனன் அவரை விட்டு நீங்கிப் போயினன்.

## XII

ஒரு நாள் மாலைப்போது, பாடசாலை மண்டபத்தில் சிரோமணி பண்டிதர், தம் மாணவர்களுக்குப் பாடங் கற்பித்து வந்தனர். பானுபாய், அவரது வலப்பக்கத்திலும், அவளுக்குப் பின் வித்தியார்னவனும் சுதரிசனனும் உட்கார்ந்திருந்தனர்.

சிரோமணியார் அவர்களுக்கு இராமாயண பாடங் கற்பித்து வருகையில், திடீரென்று "குருநாதா!" என்று விளித்தாள்.

அவ்வாறு விளித்த அவளது தீங் குரலோசை, மாணவரெல்லோ ருடைய மனங்களையும் வேறு செல்லவொட்டாமல் அவள் பால் நிறுத்திவிட்டது. சிரோமணியார் பானுவைப் பார்த்து "குழந் தாய்! நீ என்ன கேட்க விரும்புகிறாய்?" என்றார்.

அதற்குப் பானுபாய் "ஐயா! இராமாயணம் இயற்றிய வான்மீக முனிவர் கூறிய வெல்லாம் உண்மைதானா வென்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்" என்றாள்.

"குழந்தாய்! முனிவர் கூறிய வெல்லாம் உண்மையே யாகு மன்றி ஒருக்காலும் பொய்யாகாது" என்றார்.

"ஆயின், நாகாஸ்திரம், அக்கினியாஸ்திரம், வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், இராமாஸ்திரம் முதலிய அஸ்திரங்க ளெல்லாம் உண்மையானவையே அன்றோ?" என்றாள்.

இக்கேள்வியானது சிரோமணியார் மனத்தைக் கலக்கிவிட் டது. அக்கேள்விக்குப் பொருள் தெரிந்துகொள்ளாமலே, மெது வாக, "ஆம். அவை யாவும் உண்மையே யாம்" என்றார்.

"அவ்வாறாயின், அவை யெல்லாம் எங்கே மறைந்து போயின?" என்றாள்.

"ஜனங்கள் அவற்றை இயற்றும் முறைகளை மறந்துபோயி னர்?" என்றார்.

"அஃதேன்?" என்றாள்.

"ஏனெனின், ஜனங்கள் பெரிதும் ஈன நிலையை அடைந்தன ராதலால், நமக்கு வாழ்க்கை நலம் பயப்பதான மேலான காரியங் களை யெல்லாம் மறந்துவிட்டனர்" என்றார்.

"ஆனால், இப்போது அவைகளைச் செய்வது கூடுமானதே யன்றோ?" என்றாள்.

"ஒரு காலத்தில் செய்து உபயோகித்து வந்ததைத் திரும்ப வுஞ்செய்யத் தடையேதுமில்லை. செய்யலாம்" என்றார்.

"எந்தச் சாஸ்திரத்தைக்கொண்டு அவற்றைச் செய்யலாம்" என்று கேட்டாள்.

"இரசாயன சாஸ்திரம் (Chemistry), இயந்திர சாஸ்திரம் (Mechanics) இவ்வகைளைக்கொண்டு செய்யலாம்" என்றார்.

"இவ் அஸ்திரங்களை நாம் செய்யக்கூடுமாயின் இக்காலத்தில் வழங்கிவரும் துப்பாக்கி, பீரங்கி முதலியவற்றை அதிவிரைவில் அழித்துவிடலா மல்லவா?" என்றாள்.

சிரோமணியார், "மகளே! நீ ஏன் இக்கேள்விகளை யெல்லாம் மிக்க ஆவலோடு கேட்கிறாய்?" என்றார்.

அதனைக் கேட்ட பானுபாய் "குருநாதரே! நான் மகாபாரதம் படித்திருக்கின்றேன். அதில், எப்போது உலகத்தில் அநீதி மிகுந்து ஆட்சிபுரிகின்றதோ அப்போது பகவான் துஷ்ட நிக்கிரகத்தின் பொருட்டு அவதாரஞ் செய்து, அதர்ம ராஜ்ஜியத்தை யொழித்து தர்ம ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் என்று கூறியிருக்கின்றது. இப்போது தேசமெங்கும் பாவமானது பெருகி உல்லாச நடையாடி வருகின்றது. ஆகலின், பண்டைக்கால அஸ்திரங்களை முறைப்படி செய்யக்கூடுமாயின் இப்பாபிகளாகிய சண்டாளர்களைத் தொலைத்துத் தர்ம ராஜ்ஜியத்தை மீண்டும் ஸ்தாபிக்க ஆற்றலுள்ளவர்களாவோம்" என்றாள்.

"குழந்தாய்! அது நம்மா லியலுங் காரியமா? ஒருக்காலும் இயலாது. நீ எண்ணுவ தெல்லாம், 'எட்டாத கொம்பிலிருக்கின்ற தேனுக்கு எட்டியெட்டிக் கொட்டாவி கொள்ளு முடவன் நினைவைப் போலிருக்கின்றது.' நீ அவ்வாறுசெய்ய முயலுவையாயின், உன் முயற்சி வீண்படும், நீ வேதாந்தங் கற்றுக்கொள். அது கற்பிப்பதைக் கூறுகின்றேன் கேள்" என்றார்.

"ஐயா! நான் போதுமான வேதாந்தம் படித்திருக்கின்றேன். அது போதும். எனக்குச் சுவாதீனமான இருப்பில்லை யென்பதை நானறிவேன். எனக்கும் என் நாயகருக்கும் பேதமில்லை யென்பது எனக்குத் தெரியும், என்னுடைய சீவாத்துமாவானது பரமாத்துமாவால் ஆளப்படுகிற தென்பதை நான் அறிவேன். கடந்த மூவாண்டுகளாக பானுபாய் இறந்துவிட்டாள். அநந்தராய் உயிரோடிருக்கின்றார். இவற்றை யெல்லாந் தேவரீரிடமிருந்தே கற்றுக்கொண்டேன்" என்றாள்.

அவள் அவ்வாறு கூறித் தனது சகபாடகர்களை (Fellow Students)ப் பார்த்தாள். அவர்க ளெல்லோரும் அவள் கூறியதைக் கேட்டுத் திடுக்குற்றனர். சிறிது நேரம் பாடசாலையில் நிசப்தமா யிருந்தது. ஒருவரும் பேசத் துணியவில்லை. பின்னர் பானுபாய் "சகோதரா வித்தியார்னவா! நீ வேதாந்தமுங் காவியமுங் கற்றுக்கொள். நான் இன்று முதல் இரசாயன சாஸ்திரமும் யந்திர சாஸ்திரமுங் கற்றுக்கொள்ளுகின்றேன்" என்றாள்.

"சகோதரி! இல்லை, இல்லை. நான் ஒன்றுங் கற்றுக்கொள்ள மாட்டேன். நான் உன்னைத்தான் பின் தொடர்ந்து வருவேன், நானுன்னைத் தவிர வேறொன்றையு மறியேன்" என்றான் வித்தியார்னவன்.

இவ்விதமாக சிரோமணியார் பாடசாலையில் அன்றைய நாள் கழிந்தது. மாணவர்க ளெல்லோரும் சிந்தாகுலத்தோடு தங்கள் வகுப்பைவிட்டுப் போயினர். அன்றிரவு சிரோமணியார் தமது மனைவியாரிடம் "பானுபாய் சாதாரணப் பெண் ணல்லள். அவள் இத்தேசத்தில் பெருந் தீவைப்பாள்போலக் காண்கின்றது. அவள் படானியரை ஊரைவிட்டுத் துரத்த முயல்கின்றாள். அது அவளால் இயலுமா. அது வீண் பைத்தியம்" என்றார்.

(இன்னும் வரும்)

---

## விசித்திரமான அளவுகோல்.

திரேகங்களில் ஏற்படும் பல மாற்றங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்வதற்கு கார்ஜீனிக் சங்கத்தினர் ஓர் விசித்திர அளவு கோல் உபயோகிக்கின்றனர். அது திரேகத்தின் வேர்வையாலோ, உழைப்பாலோ ஏற்படும் பலக்குறைவை வினடிக்கு வினடி அளந்து காட்டக்கூடிய அவ்வளவு விசித்திரமானதும் மெல்லியதுமான அளவுகோல்.

---

லண்டனில் ஓர் இடத்தில், இரண்டு மோட்டார் வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதால், ஒரு வண்டியில் இருந்த அதுவரை சரியாகப் பேசும் சக்தியற்றிருந்த இருபது வயதுள்ள டோரிஸ் என்ற பெண் திடீரென்று பேசத் தொடங்கிவிட்டாளாம். அதாவது ஆபத்து நேர்ந்தால் அவள் பேசுவாளென்று வைத்தியர்கள் சொல்லி யிருந்தார்களாம்.

## முதலைவீரர்.

முதலைகளைப் பழக்குவதில் திறமைசாலி யென்று பெயர்வாங்கியுள்ள தளபதி வால் என்பவர் மஜேஸ்கா என்ற இடத்திற்கு சுமார் 170 மைல் தூரம் வரை தண்ணீரில் ஒரு முதலையின்மீது எவ்விதச் சுக்கானும் துடுப்பும் இல்லாமற் சென்றாராம். இவர் மரத்தால் செய்த சிகப்புக் கருவி ஒன்றை முதலைமீது வைத்துக்கொண்டு அதன்மீது உட்கார்ந்து சென்றாராம். முதலைக்குக் கடிவாளம் போட்டுப் பிடித்துக்கொண்டார். கையில் எஃகினால் செய்த அங்குசம் வைத்திருந்தார். 170 மைலையும் 12 மணி 30 நிமிஷம் 12 வினடியில் கடந்து விட்டாராம். ஸ்பெயின் தேசத்துக் கப்பலொன்று தளபதிவாலுடன் வெளிச்சங் காட்டிக்கொண்டு சென்றதாம். இது மிகவும் சாமர்த்தியமே.

# நம்பிக்கை

சென்னை, பச்சையப்பன் கல்லூரி, தமிழ்ப் பேராசிரியர்

மணி - திருநாவுக்கரசு முதலியார் எழுதியது.

ஒவ்வொருவரும் நம்பிக்கையினாலேயே உயிர் வாழ்கின்றனர். அஃதில்லையாயின், உலகத்திலே பல்வகைத் துன்பங்களிலே உழல் கின்ற மக்கள் அவ்வப்போது தமக்கு உறுதுணை காணாது உயிர் விடத் துணிவர். நம்பிக்கையே கலங்கிக் கண்ணீர் சொரிந்து 'என் செய்வேன்' என்று ஏங்கி நிற்பாருக்குக் கை கொடுத்து உயிர்ப் பிச்சை வழங்கும் உத்தம வள்ளலாவது. 'நேற்று அரைப் பட்டினி, இன்று முழுப்பட்டினி, நாளை என்னோ?' என்றிருப் பாருக்கு 'அஞ்சற்க. நாளை எங்ஙனமேனும் பொருள் வரும்,' என்று மகிழ்ச்சியை ஊட்டுவதும் நம்பிக்கையே. 'மருத்துவரும் கைவிட்டார்; அவரினுஞ் சிறந்தவர் ஒருவரு மிலர்; இனி எமன் வரும் நாளைத்தான் நான் எதிர்பார்க்க வேண்டும்,' என்று சோர்ந்து, நிலையழிவார்க்கு 'அங்ஙனம் எண்ணுதீர்; மருத்துவர் கைவிட்ட மக்கள் எத்தனையோ பேர் உயிர் வாழ்ந்திருக்கின்றனர்; இவர் அறியாமையாற் கூறுகின்றவற்றைப் பொருட் செய்ய வேண்டாம்,' என்றுணர்த்திப் புதியதோர் உவகையினைப் புலப் படுத்துவது நம்பிக்கையே.

வாழ்க்கையிலே உப்புச் சப்பின்றி, 'என்ன! காலங்கழிக்க வேண்டுவது தானே. எனக்கென்ன இன்பம் உண்டு; இதுகாறும் ஓரின்பமும் நான் எய்தியதில்லை. இனி என்ன அடையப் போகின் றேன்; பிறந்தது முதல் துன்பத்திற் சிறந்த தன்றி இன்பத்தில் மறந்தது ஒரு நொடிப்பொழுதும் இல்லை,' என்று வெறுப்படை வோருக்கும் 'அற்றன்று; நாளை இன்னது வரும் என்பது உனக்கு என்ன தெரியும்? "குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்," "அறத்திடு பிச்சை கூவி இரப்போர் அரசோடிருந் தரசாளினும் ஆள்வர்," என்னும் பொன் மொழிகளை நீ கற்றதில்லையா? இவையனைத்தும் அநுபவ வசனங்களே; ஏட்டுச் சுரைக்காய் என்று எண்ண வேண் டாம், என்று அறிவு புகட்டுவதும் நம்பிக்கையே.

நம்பிக்கை, தளர்ந்தபொழுது இன்பந் தருவதில் தாயைப் போலவும் தட்டிக்கொடுத்து அறிவு கொளுத்துவதில் ஆசிரியனைப் போலவும் உற்றவிடத்து உதவுதலில் நண்பன்போலவும் விளங்கு கின்றது. சீதாபிராட்டியார் தாம் இராமபிரானைப் பிரிந்து அசோக வனத்திலே அவ்வளவு காலம் உயிருடன் இருந்ததற்குக் காரண மாக 'என் உயிரினும் இனிய கரிய இரத்தினம் போன்ற இராம

பிரானைக் 'காணலாம் என்னும் ஆசை தூண்டிக் கொண்டே இருத்தலால் இதுகாறும் என் உயிரைக் காத்தேன்; இன்றேல் எப்பொழுதோ இறந்திருப்பேன்' எனக் கூறியது அவருக்கு இருந்த நம்பிக்கையினைக் காட்டுகின்ற தன்றோ! அந்நம்பிக்கையை அவர் இழந்திருந்தால் உயிரையும் இழந்திருப்பார் என்பதும் இனிது புலப்படுகின்ற தன்றோ?

அன்றியும் அவ்வம்மையார், 'இராமபிரான் வரவில்லை; நான் எத்தனை நாள் இழிவுடன் இப்பகைவன் இடத்தில் இருப்பேன்; இனி நான் உயிர் துறத்தலே எனக்கு எவ்வகையானும் நலமென்று உட்கொண்டு உயிரைத் துறக்கத் துணிந்து நிற்கும் நிலையிலே, அச்செயலைப் பார்த்துக்கொண்டிருந்த அனுமான் உடனே இராமன் திரு நாமங்களைச் சொல்லிக்கொண்டு அப்பாவை எதிரே தோன்றிய அளவில், துண்ணென அஞ்சிப் பின்னர் அவனை முடி கொண்டு அடிகாறும் நோக்கி, ஐய முதலியவற்றை அறவே ஒழித்துத் துணிவாக, 'இவன் மாயையில் வல்ல அரக்கனானாலும் ஆக, அன்றி வேறு தேவன் ஆயினும் ஆக, அல்லது தோன்றுகிறபடி குரங்குகட்குத் தலைவனாயினும் ஆக. அவற்றைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. இங்கு என்மேல் இரக்கங்கொண்டு வந்து, "எம் பிரான் நாமஞ்சொல்லி என்னை உருக்கினன்; உணர்வைத்தந்தான்; உயரிதின் உதவியுண்டோ," என்று கூறிச் சிறிது மகிழ்ந்தனர் என்றால் நம்பிக்கையின் ஆற்றல் எத்துணைத்தாகும்.

ஒரு சிறிய விஷயம் முதல் பெரிய விஷயம் வரையில் நம்பிக்கை இன்றியமையாததாகும். நம்பிக்கை இல்லாதவன் யாதொரு செயலையும் செய்து முடிக்க இயலாது. நம்பிக்கை உள்ளவன் மலையையும் தூக்கிச் செண்டுபோல் விளையாடுவான். தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த

"எண்ணியார் எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

என்னும் திருக்குறளும் நம்பிக்கையின் வன்மையை ஒருவாறு காட்டும் எனக் கொள்ளுதல் குற்ற மன்றாம்.

மேனாட்டுப் புலவர் நம்பிக்கையை முதன்மையாக வைத்து இப்பொழுது பல அரிய நூல்கள் எழுதி வருகின்றனர். அவற்றில் அவர்கள் நம்பிக்கையால் எத்தகைய கொடும்பிணியும் தீர்ந்தொழிதலையும் அரும் பெரும் செயல்களும் முடிவு பெறுதலையும் அநுபவத்திலே எடுத்துக் காட்டி, மிக அழகாக விளக்கி யிருக்கின்றனர். உண்மையாக நெஞ்சை ஒளிக்காமல் காரியத்தை முடிப்பேன் என்ற ஒருவன் எப்பொழுதும் அதைச் செய்து முடிக்கத்

தவறிய தில்லை. அங்ஙனம் சொல்லித் தவறியவர்கள் எல்லோரும் நெஞ்சை வஞ்சித்தவர்களே ஆவர் எனத் துணிந்து கூறலாம். போர்க்களத்திலே வெற்றி அடைந்த வீரர்களும் அவைக் களத்திலே வாதுபுரிந்து வென்ற புலவர்களும் இந்நம்பிக்கை உடையவர்களாக வே இருந்தனர். இன்றைக்கும் பலர் 'நான் ஆகாது' என்று ஒரு காரியத்தையும் நினைத்ததில்லை என்றும் அவ்வாறே தாம் நினைத்த கருமங்கள் யாவும் இடையூறின்று இனிது முடிந்தன என்றும் கூறி மகிழ்கின்றனர். ஆரூடம் சொல்லுவோரிற் சிலர் கேட்ட வுடன் தயங்காமற் சொல்லும் குறிகள் எல்லாம் எப்பொழுதும் பலிக்கின்றன என்றும் தயங்கிச் சொல்லும் குறிகள் தப்புகின்றன என்றும் உரைக்கின்றனர். அதனாலேதான் அவர்கள் ஆரூடம் கேட் பவர்களைப் 'பூவில் ஒன்று சொல்; நூற்றுக்குக் குறைய ஒன்று சொல்' என்று கேட்கும்பொழுதெல்லாம் தயங்காமற் சொல்லும் படி கேட்கின்றனர். இவைகளை நாம் நோக்கும்பொழுது நம்பிக் கையில் பல நன்மைகள் விளைகின்றன என்பது தெளிவாகும்.

இனி, நம்பிக்கையால் நன்மை எங்ஙனம் விளைகின்றது, என் பதைப் பற்றிச் சிறிது நினைத்துப் பார்க்கலாம். நம்முடைய வாழ்க் கையில் எவ்வளவோ அரிய இரகசியங்கள் உள்ளன. அவற்றை எல்லாம் நாம் சாதாரணம் என்று பழக்கத்தால் நினைத்துக்கொள் கிறோம். ஆனால் அவைகளில் பல நாம் எண்ணுகின்றபடி சாதாரண மான விஷயங்கள் அல்ல. ஒவ்வொன்றும் ஒருவர் வாழ்நாள் முழு வதும் ஆராய்ந்தும் அறியக் கூடாதவை யாகும். இதுவும் அது போன்ற ஓர் இரகசியமே. ஆனால் ஒன்றுமட்டும் இப்பொழுது தெரிந்து கொள்ளலாம். நம்பிக்கை என்பது மனத்தின் துணி வான நிலைமை. மனம் ஒரு நிலைப்படாது சுழன்று திரியும் இயல் பினை யுடையது. அஃது ஒரு வழிப் படுவதனாலேயே ஓர் ஒப்புயர் வற்ற ஆற்றல் உண்டாகின்றது. அவ்வாற்றல் காரணமாக அரும் பெருஞ் செயல்கள் பல முடிகின்றன. அத்தகைய சிறந்த ஆற்றலை வேறெக் காரணங்களாலும் நாம் அடைவது அரிது. மனம் ஒரு நிலைப்படுகின்ற தன்மையில் ஆன்ம சக்தியை முழுதும் தன்னிடம் வாங்கிக் கொள்கின்றது. அதனால் அது மிக்கதோர் ஆற்றலைப் பெறுகின்றது.

உண்மைப் பாவலர் பாடும் பாடல்களிலும், சிறந்த நாவலர் பொழியும் சொற்களிலும் இந்நிலைமையினை நன்கு காணலாகும். இவற்றை நம்மனோர் ஆவேச மொழிகள் என்பர். மேனாட்டா ரும் இதனை ஒப்புக்கொள்கின்றனர். இஃது உற்று நோக்கு வாருக்கு ஒவ்வொரு காலத்திலே தம்முடைய அனுபவத்திலே வந்தவை யாகவே தோன்றும்.

## நம்பிக்கை

இனி இவ்வாற்றலை எவ்வாறு பெறுதல் கூடும் என்பதைப் பற்றி அறிய முயல்வோம். இது பாவனையால்தான் வரும். மாந்தரீகன் கருடனைப் பாவனை செய்தே பாம்பின் நஞ்சை இறக்குகின்றான். தத்துவஞானி சிவத்தைப் பாவனை செய்தே சிவமாந் தன்மைப் பெருவாழ்வை அடைகின்றான் என்று நமது அறிவு நூல்கள் முழங்குகின்றன. அதனால் இச்சித்தி, பழக்கத்தால்தான் வரற்பாலது. இங்ஙனம் நாடோறும் பழகி வருதல் வேண்டும். அங்ஙனம் பழகுதலிலும் ஒரு வழிபடுகடவுளை முன்னிலைப்படுத்திச் செய்தல் மிகவும் சிறந்ததாகும். ஏனெனில் நம்மினும் மேன்மையான ஒரு சக்தி நமக்குப் பின்னிருந்து நம்மைத் தள்ளுகின்றது என்றும் அது நம்மை ஆட்டுவித்துத் தானும் ஆடுகின்றது என்றும் அது வேண்டுவார் வேண்டுவதை ஈய வல்லதென்றும் அறிவதனால் நாம் எவ்வளவு ஆற்றல் உடையவராகின்றோம் என்பது கூற வேண்டுமோ ?

இப்பழக்கத்திற்கு ஒரு நேரம் வரை யறுத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஆனாலும் இதனைத் தூங்குவதற்கு முன்னும் விழித்த பின்னும் செய்தல் மிக்க பயனை விளைப்பதாகும். நமக்கு விருப்பமான பொருள்களை நாம் பாவனை செய்து பழகலாம். ஆனால் அவ்வெண்ணங்களும் நல்ல சொற்களில் அழகுற அமைந்திருப்பின் அதனாலும் ஒரு பயனை நாம் அடையலாம். சொற்களுக்கும் ஆற்றல் உண்டு. பெரியோர் சொற்கள் அதனினும் பயன் மிக்கவை. இவற்றோடு பண்ணும் இசைந்து சொற் கட்டும் பொருட்செறிவும் பல நோக்கும் நயமும் உடைய பாட்டுகளாக இருப்பின் அது நிரம்பிய தன்மை உடையதென்று கூறலாம். அத்தகைய திருப்பாடல்கள் **திருநாவுக்கரசு சுவாமிகள்** தேவாரத்திலே எளிதிலே கிடைக்கும். அவற்றுள் நமக்கு மிகப் பொருத்தமான இரண்டு திருப்பாடல்களை இங்குத் தருவேன். இவை பல்லவ மன்னவனுடைய ஆணையுடன் போந்த அமைச்சர் முதலாயினார் அவரை நோக்கி, "மன்னவன் கட்டளை இது ; தாங்கள் அவரிடம் வருதல் வேண்டும்," என அழைத்தபோது அவர் கூறிய திருப்பாட்டுக்களுள் இரண்டு. இவையிரண்டிலும் ஒருவருக்கு வேண்டியவை அனைத்தும் அடங்கியிருக்கின்றன. சிவபக்தி துளும்பி வழிகின்றது; செந்தமிழ்ச் சுவை விஞ்சுகின்றது. இதன்கண் நம்பிக்கை உடையவர் நம்பிப் பயனடைவார் என்பது எனது நம்பிக்கை.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை

தாமார்க்குங் குடிஅல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகி னோமே."

"என்றும்நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிர் ஆவாரும் இல்லை
சென்றுநாம் சிறுதெய்வஞ் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோம் அல்லோம் அன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே."

---

## தும்மல் மரம்

தென் ஆப்பிரிக்காவில் ஒரு வித மரம் இருக்கிறது. அதனை அறுத்தாலும் வெட்டினாலும் மனிதருக்குத் தும்மல் உண்டாகிறது. பூச்சிகளில் ஒன்றும், இதனை நாடுவதில்லை. இது மிகவும் கசப்பாம். வேலைக்காக வெட்டிக் காய்ந்த மாம் கெட்டியாயும் பார்வைக்கு அழகாயும் இருக்கின்றதாம். இம்மரம் ஜலத்தில் நீண்ட நாளைக்குக் கெடாமலிருப்பதால் கடற் பாலங்கள் முதலிய வேலைகளுக்கு மிகவும் உபயோகமாகின்றதாம். இதற்குப் பெயர் **தும்பல்** மரம்.

---

## இன்ஷியூர் செய்த மரம்

காலிபோர்னியாவி லிருக்கும் லிட்டியர் என்னும் பட்டணத்தில் மிஸ்டர் எச். ஏ. உட்வொர்த் என்பவருக்குச் சொந்தமாயிருக்கும் ஒரு பெரிய மரமானது நெருப்பு, பனி முதலியவற்றால் நாசமடையாமலும் சொந்தக்காரருக்கு நஷ்டமில்லாமலும் இருக்கும் பொருட்டு 6000 பவுனுக்கு இன்ஷியூர் செய்யப்பட் டிருக்கிறதாம். அந்த மரத்தில் பிரதி வருஷமும் சுமார் 640 பவுன் மதிப்புள்ள காய்கள் கிடைக்கின்றனவாம்.

# "வெண்ணில வின்பம்"

(ஆரியூர் - "திருமகள் நிலையம்" வ. பதுமநாப பிள்ளை.)

இறைவனது திருவருட் படைப்புக்குட்பட்ட இந் நில வுலகின் கண், காணுந்தோறும், கருதுந்தோறும் களிப்பை விளைக்கும் இயற்கை யெழில் வாய்ந்த காட்சிகள் மிகப் பல. மானிடனது மதி வன்மையால் ஆக்கப்பெறும் பலதிறப்பட்ட செயற்கைப் பொருள்களைக் காட்டிலும், வெளித்தோற்றத்திற்கு மிகவும் சாதாரண மாய்த் தோன்றி, ஊன்றி நோக்க நோக்க உள்ளத்திற்கு உவப்பை விளைப்பன இயற்கைப் பொருள்களேயாம். இயற்கைத் தேவியின் எழில்வளத்தைக் கூர்ந்து நோக்கி இன்ப மெய்தாதார் இரு கண்களாற் பெறத்தக்க பெரும் பேறுகளுள், பெரும் பகுதியையும் இழப்போரே ஆவர். இயற்கை யின்பத்தோடு இசைந்த வாழ்வு நடாத்துவோரே, இறைவன் பெருமையை இனிது தெளியப் பெறுவோர் ஆவர். இதனாலன்றோ நமது முன்னோராய அடியார்களும், புலவர் பெருமக்களும் அமுதவெள்ளம் பொழியும் திங்களையும், மலர்களும் கனிகளும் நிறைந்து தழைத்து நிற்கும் மரங்களையும், அருவிகளையும் அழகிய செடி கொடிகளையும் தன்னகத்தே தாங்கி நிற்கும் மலைகளையும், புள்ளினங்கள் ஆடிப்பாடி அகமகிழும் சோலைகளையும், பிறவற்றையும் இறைவனாகக் கண்டு வழிபட்டார்கள்!..." இருநிலனாய்த் தீயாகி நீருமாகி, இயமானனா யெறியுங் காற்றுமாகி—அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி" எனவும், "மாசில் வீணையும், மாலை மதியமும்—வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்—மூசுவண் டறை பொய்கையும் போன்றதே—ஈச னெந்தை இணையடி நீழலே" —எனவும் வரும் அப்பர் அருள் மொழிகளையும்,

"அணி மதியிலே, மதியி னடுவிலே, உருவிலே, அவ்வுருவி
[னுருவத்திலே,
அமுத கிரணத்திலே, அக்கிரணவொளியிலே, அவ்வொளியி
[னொளிதன்னிலே,
பணிமதியி னமுதிலே, அவ்வமு தினிப்பிலே, பக்கநெடு வடி
[முடியிலே,
பாங்குபெற வோங்குமொரு சித்தே! எனுள்ளே பலித்த
[பரமானந்தமே!

என வரூஉம் இராமலிங்கசுவாமிகள் இன்பமொழிகளையும் நோக்குக.

மற்றும், இமையவர் உலகிற்கு, பிணி மூப்பு பசி முதலிய துன்பங்கள் ஏதுமில்லாத பெருவாழ்வை அளித்த அமுதோடு

தோன்றி, இம்மண்ணுலகங் கண்டு மகிழ நிலவி வருவது வெண் மதியம் ஒன்றே யன்றோ !

"கொடியை அல்லை நீ ; யாரையும் கொல்கிலாய்!
மடியில் இன்னமு தத்தொடும் வந்தனை ;
பிடியின் மென்னடைப் பெண்ணொடென்று லெனைச்
சுடுதியோ! கடல் தோன்றிய திங்களே!"

எனப் பிராட்டியாரும், வெண்ணிலவை விதந்தோதினமை காண்க. ஆகலின், இம் மண்ணுலகில் இயற்கைக் காட்சிகட்கெலாம், இறை யா யமர்ந்து, மணாளரோடு கூடிய மங்கைகட்கும், இறைவனது திருவருட்படைப்பின் இனிமையை ஆராய்ந்து மகிழ்வோர்க்கும், எல்லையற்ற இன்பமூட்டி நிலவுவது வெண்மதியமே யாம். நில வின்பம் நுகர்வோர்க்கு, இறைவனது இணையடிகளைத் தவிர்த்து, அவ்வின்பத்தை ஒத்த பிறிதொரு பெரிய இன்பம் இல்லை யென் பது மிகை யாகாது. "நிலாவையும் வானத்து மீனையும், காற்றை யும் நேர்ப்பட வைத்தாங்கே—குலாவு மமுதக் குழம்பைக் குடித் தொரு கோகுல வெறி படைத்தோம்"—; "சீரவிரும் சுடர் மீனொடு வானத்துத் திங்களையும் சமைத்தே—ஓரழகாக விளங்கிடும் உள்ளத்தை ஒப்பதோர் செல்வ முண்டோ?"—எனவும் வரூஉம் "பாடிய வாய் தேனூறும் பாரதியார் பாடல்" களைப் பார்த்தும் உண்மை தெளிக.

பகல் முழுவதும் தீச்சுடரினும் தீய வெப்பத்தை விளைக்கும் வெங்கதிரோனால், வெம்பிப் புழுங்கிக் கிடந்த பூமகள், மாலைப் பொழுது கழிந்ததும் தனது இனிய சகோதரி 'சந்திரமதி' தேவி யின் விஜயத்தினால், எத்துணைப் பெரியதோர் இன்பம் நுகர் கின்றனள்! ஆ! தனது துயரெலாம் அகல, தனது செல்வத் தங்கையைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று, அலைமோதி ஓடும் ஆறுகளென்ன! வெள்ளைவெளே லென்று விளங்கும், வேலைப்பா டமைந்த கட்டடங்க ளென்ன! செழித்துத் தழைத்துப் பூத்துக் காய்த்து விளங்கிச் சிறு காற்றினால் சலசல வென்றசையும் இலை களையுடைய மரங்களென்ன! பச்சைப் பசேலென்று பரந்து கிடக்கும், பசும்புலன்க ளென்ன!-பின்னும் பலவற்றையுங் காட்டி, மகிழ்கின்றனள்! தனது தமையனும் நீலக்கடல் அரசனும், தனது தங்கை முழு உருவத்தோடும் வந்து விளையாடு தலைக்கண்டு, உள்ளத்தெழும் உவகை வெள்ளத்தை ஒடுக்க ஒண் ணாது, பொங்கிப் பொங்கி எழுகின்றனன். ஆ! நிலா! எத் துணை அழகிய சொல்! எத்துணை இன்பம் ஈகிறது!! எங்கணும் ஒரே அமைதி! எங்கணும் ஒரே குளிர்ச்சி! எங்கணும் ஒரே இன்ப வெள்ளம்! ஆரவாரங்களின்றும் அகன்று, ஐம்புலன்களை

அடக்கி, இன்ப வடிவான இறைவனை அகத்திலிருத்திப் பேரின்பம் துய்க்க விரும்பும் யோகிகட்கு, இதனினும் அரியதொரு வேளை வாய்க்குமோ! இயற்கை வனப்பில் மூழ்கியெழும் பாவாணர் இதயத்திலே, வெண்ணில வின்பம், எல்லையற்ற உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குகின்றதன்றே! கவிச்சக்கர வர்த்தியாகிய கம்பர்பெருமான்,

" பெருந்திண்ணெடு மால்வரை நிறுவிப் பிணித்தபாம்பின் மணித் [தாம்பால்
விரிந்த திவலை மணியுதிர விசும்பின் மீனின் மேல் விளங்க
அருந்த வமரர் கலக்கியநாள் அமுதம் நிறைந்த பொற்கலசம்
இருந்த திடைவந் தெழுந்ததென எழுந்த தாழி வெண்திங்கள்"—;

" நீத்த மதனில் முளைத்தெழுந்த நெடுவெண் திங்கள் எனுந்தச்சன்
மீத்தன் கரங்களவை பரப்பி மிகுவெண்ணிலவாம் வெண்சுதையால்
காத்த கண்ணன் மணியுந்திக் கமல நாளத் திடைப் பண்டு
பூத்த வண்டம் பழையதென்று, புதுக்குவானும் போன்றுளதால்"—

என வரூஉம் அமுதொழுகும் பாக்களில், வெண்மதியின் இன்பக் காட்சியை அமைத்துத் தருகின்றா ரன்றே!

சுக்லபட்சத்து அஷ்டமி முதல், கிருஷ்ண பட்சத்து அஷ்டமிவரை உள்ள இரு வாரங்களிலும், பெரும்பாலும், நிலவு நிலவுகின்ற தெனினும், பௌர்ணமியிலும், அதன் முன்பின்னுள்ள ஐந்தாறு நாட்களிலுமே, தண்மதியம் நீண்டகாலம் தனது வெள்ளிய கிரணங்களைப் பெரிதும் பரப்புகின்றது. மாதத்தின் முப்பது நாட்களிலும்-ஒவ்வொரு நாளும், தண்மதியம் தனது கிரணங்களைப் பரப்பி மகிழ்வூட்ட எலாது, மற்றிரண்டு வாரங்களிலும் மங்கிவிடுதல், பூமிதேவியின் தவக்குறைவே போலும்! எங்கணும், ஒரே அமைதி நிலவி இன்பமயமா யிலங்கும் வேளையில்,-வெண்மதியம் தனது குளிர்ச்சி பொருந்திய கிரணங்களைப் பரப்பி மகிழ்வூட்டும் போது-இயற்கையெழில் வளத்தைச் சுவைக்கும் எவரைத்தான் நித்ராதேவி நெருங்கத் துணிவள்! உணர்ச்சியும் உவகையும் உற்சாகமும், உள்ளக் கிளர்ச்சியும் ஒருங்கே கலந்து பொங்கும்போது, சோம்பலும் மயக்கமும் உணர்ச்சியின்மையும் விளைக்கும் உறக்கத்திற்கு இடமேது? இயற்கை யெழிலிற்படிந்து, இன்ப வெள்ளத்தில் மூழ்கிய பாவாணர்தம் தீஞ்சுவைப் பாக்கள் நிறைந்த பனுவல்களையும், உணர்ச்சி யெழுப்பும் உத்தம நூல்களையும், கையிலெடுத்து, பட்டப்பகல் போற் காயும் பனிமதியின் அமுத கிரணவொளியிலே, படிக்க உட்கார்ந்து விட்டால் விளைவதென்னை? ஆ! இவ்வுலக நினைவே மறந்து, வெண்ணிலவைக் காணுந்தோறும் பேரின்பமும், எழுத்தைப் படிக்குந்தோறும் இயம்பொணு இன்ப

மும், கருத்தில் இருத்துந்தோறும் களி பெருவகையும் பெருகி, 'இன்பவுலகி' லன்றோ, நிலவ நேர்கின்றது! (இது நமது கைகண்ட அனுபவம்; நண்பர்களும், பரீட்சித்துப் பார்த்துப் பயனடைவார்களாக.) மற்றும், வெயிலின் கொடுமைக்கஞ்சி பகலில் உறங்கிக் கிடக்கும் வேளாளரில் மிகப்பலர், நிலவு நாட்களில், விடியவிடியத் தமது புலங்கட்கு உற்சாகம் பொங்கும் உள்ளத்தினராய், தண்ணீரிறைத்தல், தமிழ் நாடெங்கணும் நடைபெற்று வருதல் சர்வ சாதாரணமாம். அன்னார்தம் ஆற்றொழுக்குப் போன்ற ஏற்றப் பாட்டும், அவர் தம் உள்ளக்களிப்பை வெளிப்படுத்துவனவாம். கிணற்றின் மேலும் உள்ளும் வேலைசெய்யும், அத்தகையோரை தூக்கமயக்கம் நெருங்கா தொழிதலும், நிலவின்பப் பெருமையை துலங்கச்செய்யும். அம்மட்டோ! பேச்சில் இன்பம் பெறுவோர்க்கும், உத்ஸாகத்தோடு வழி நடப்போர்க்கும்; பலவித விளையாட்டுகளில் தேர்ந்த பயிற்சியும், பெரு விருப்பமும் வாய்ந்த பிள்ளைகட்கும்; அன்னை சொல்லும் நிலாப் பாட்டைக் கேட்டு ஆனந்திக்கும், பச்சிளங் குழவிமுதல்-கதைகள் சொல்லிக் காலம் போக்கும் பாட்டி வரை உள்ள எத்தகையோர்க்கும், அளப்பரிய இன்பம் விளைப்பது வெண்ணிலவே யன்றோ!

எத்தகைப் பிணக்கு மின்றி இனிது கலந்து காத லின்பம் நுகரும் காதலர்கட்கு, வெண்ணிலவு விளைக்கும் இன்பத்தை என்னென்று கூறுவது?

"கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய்ப்; பிரிந்
துலந்தவர்க் குயிர்சுடு விடமுமாய்; உடன்
புலந்தவர்க் குதவிசெய் புதியதூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா மதனன் வேண்டவே"-

என்றார் கம்பரும். உள்ளத்தை உருக்கி, இறைவனையும் வசப்படுத்தவல்ல இன்னிசைக்கும், வெண்ணிலவு வேளையே சாலச் சிறந்த தென்பதை விரித் துரைக்கவும் வேண்டுமோ? மாடுகளையும் மரங்களையும் கற்களையும் உருகச் செய்யும் கான லோலனான கண்ண பிரான், வெண்ணிலவின் கிரணங்களால் வெள்ளியே யென விளங்கும் மணல் பரந்துகிடக்கும் யமுனையாற்றங் கரை யிலே, தேவர்களையும் வியக்கச் செய்யும் தனது தீங்குழலைத் திருவா யிடை வைத்து, விரல்களை மிழற்றி, விளைத்த அமுதையும் நாணச் செய்யும் அரிய இசையினைச் செவி மடுத்த, ஆயர் பெண்களைத் தத்தமது பெற்றாரையும் உற்றாரையும் மறப்பித்து, கோபாலனைக் குறுகத் தூண்டியதும், வெண்ணில வின்பமே! பரந்தாமனது சோதனைத் திருவிளையாட்டிற்கு, முதலில் இலக்காகிய போது, "பகவானை தழுவப் பெற்றிலோமே" என ஏங்கி நிற்கும் அப்பேதைப் பெண்கள், வெண்ணிலவால் வெதும்புகின்றனர். எம்பிரானைக் கூடி மகிழும் இன்பத்

தால் அமுதமென நிலவும் தண் மதியம், அவனது மாய ஊடலால் நஞ்சாகத் தோன்றுகிறது; தீயாக எரிக்கிறது. சிறிது நேரஞ் சென்றபின், இறைவனது திருவுள்ளம் இரங்குகின்றது; உடனே, ஊடல் தீர்ந்து அக் கோவியரோடு கோபாலன் கூடி விளையாடு கின்ருன். முதலில், பரிசோதிக்கப் பெற்ற அப்பாவை நல்லார் பின்னர் வரம்பிலா இன்பம் வழங்கப் பெறுகின்றனர். வெண்ணி லவு தண்ணென அமுதம் பொழிகின்றது. இவ்வரிய காட்சியினைப் புலவர் திலகராம் ஆரியப் புலவர் தேனொழுகும் பாவில் சித் தரித்துத் தருதல் காண்க:—

" மருக்கமழ் கமலக்கையான் மான்மதத் திலகந் தீட்டி
முருக்கித ழொருத்தி யந்தண் முகிழ்நகை வதன நோக்கும்
உருக்கிளர் மறுவிற்ருகி ஒண்கலை நிறைந்து தோன்றும்,
திருக்கிளர் நிலவுபூத்த திங்களங் கவினு நோக்கும் "—

(பாகவதபுராணம்.)

ஆ! மாசு மறு வற்ற நீல வானத்திலே,—அங்கொன்றும் இங் கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் பற்பல விண்மீன்க ளிடையிலே,- விநோத விசித்திர உருவங்களை அடிக்கடி தாங்கி மாறும் மேகக் கூட்டங்களால் மறைந்தும், வெளிப்பட்டும், 'ஆகாய வீதியில் பவனி வரும் வெண்ணிலவு, இயற்கை யின்ப ஆராய்ச்சியாளர்கள் இத யத்திலே எத்துணைப் பெரியதொரு இன்பம் ஊட்டுகின்றது! அவ் வரிய காட்சியினுல், எவரே உள்ளம் உருகாதார்!

" அல்லி னிருண்மாக் கடல்சுவற்றி, அளியன் முலைமேல் [அழலூற்றி
கொல்லுங் கொடிய வெண்திங்காள்! கொழிக்கும் நினது [கதிர்சிறிது
புல்லும் பொழுதில் ஒழியாது புனல்கான் றிந்துகாந்தமெனும்
கல்லு முருகும் எனிலுலகில் எவரே ஆவி கரையாதார்! "—

(நைடதம்)

எனத் தமயந்தியும் தண்ணிலவின் ஆற்றலை விதந் தோதினமை காண்க. வெண் மதியம் விளைக்கும் அளப் பரிய இன்பத்தை அவா வியே போலும், மூவிலைச் சூலத்தனுய முக்கட்பிரானும், 'மூத்த பிள்ளையாரும்,' 'முற்ருத பான்மதிய' த்தை முடி சேர்த் திடுவா ராயினுர்!

வெண்ணில வின்பத்தை நுகர்ந்து வியந்த பண்டைப் புலவர் பெருமக்கள், தமது மகிழ்வைப் பாக்கள் பாக்களாக பாடிச் சென்ற னர். நஞ்ச முண்ட நீல கண்டனது மாண்பு அளவிடப்படாதது போலவே அவன் முடியில் வீற்றிருக்கும் அமுதனைய தண்மதியத் தின் ஆற்றலும், இனிமையும் அளவிடற் கரியனவாகவே விளங்கு

கின்றன. அதன் இன்பத்தினை சொல்லுந் தோறும், கருதுந் தோறும் புதுப்புது இன்பம், பொங்கி வழிகின்றதே யன்றித் தெவிட்டக் காணோம். ஆதலின், செந்தமிழ் நாட்டு மக்களே! கீழ் வரூஉம், பாரதியாரது அநுபவ உண்மைகளைக் கடைப்பிடித்து, வெண்ணிலவின் காட்சியைக் கண்டு களித்து வெள்ளத்தில் மூழ்கி எழுங்கள்!

"வீதிக் கதவை யடைப்பதும்; கீழ்த்திசை வம்மிடும் சங்கொலியும்
வாதுகள் பேசிடு மாந்தர் குரலும்; மதலை யழுங் குரலும்
எதெது கொண்டு வருகுது காற்றிவை யெண்ணி லகப்படுமோ?
சீதக்கதிர்மதி மேற்சென்று பாய்ந்தங்கு தேனுண்ணுவாய்
மனமே!"

---

# கற்பின் மகிமை

## வேதவதியின் சரித்திரம்.

வேதாரண்யம் வி. ஆர். விஸ்வநாத சாஸ்திரியார் எழுதியது.

இமவன மென்னும் பெயர் பொருந்திய ஆரண்யத்தில் அந்தணரில் மிகுந்த விரத சீலரான வீரசத்வ மகா முனிவ ரென்ற ரிஷி ஒருவர் இருந்தார். அவருக்கு எப்பொழுதும் கர்ம காண்டத்தில் தான் அதிக நம்பிக்கை. சந்தியாவந்தனாதி கர்மங்களை விடாது அநுஷ்டித்து வேத பாராயணமும் விடாது செய்து வந்தார். இப்படிக்கிருக்கும் காலையில் வேத பாராயண மகிமையால் ஒரு கன்னிகா ரத்னம் பிறந்தது. அந்த மகவுக்கு "வேதவதி" என்ற நாமத்தை இட்டார். அக் குழந்தையானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மங்கைப் பருவம் அடைந்தாள். அவள் மேனி சுவர்ண மேனி, கூந்தல் கறுப்பு, விழிகள் நீலோத்பலங்கள், நெற்றி சந்திரன். கன்னங்கள் கண்ணாடிகள். மூக்கு எட்பூ. புருவம் மன்மதன் வில், கொங்கைகள் சுவர்ண கும்பங்கள். இன்னும் அவள் அவயவங்களை வர்ணிக்க வாசா மகோசரம். அவளைக் கண்ட ஸ்தீரிகளே அவளிடம் ஆசை கொள்வார்களென்றால் அவள் வனப்பைக் கண்டு ஆடவர்கள் படும் அவஸ்தையைச் சொல்லவும் வேண்டுமோ! இப்படி இருக்கும் நாளையில் தேவர்களும், இராக்கதர்களும், மானுடர்களும் இவளைக் கல்யாணம் செய்து கொள்ள விருப்பங் கொண்டு ரிஷியைக் கேட்டார்கள். அதற்கு வேதவதி சம்மதிக்காததினால் எல்லாரும் வருத்தத்துடன்

திரும்பிவிட்டார்கள். இதில் சம்புவென்னும் அரக்கன் ரிஷி தனக்கு பெண்ணை கொடுக்கவில்லை யென்ற கோபத்தினல் ரிஷியைக் கொன்றுவிட்டான். அதிலிருந்து வேதவதியானவள் தவவேடம் பூண்டு பஞ்சாக்கினி மத்தியி லிருந்து, விஷ்ணுவை மணக்க விருப் பங் கொண்டு தவம் செய்ய வாரம்பித்து தவம் செய்துகொண்டிருந் தாள்.

இப்படிக் கிருக்கும் சமயத்தில் லங்காதிபதியாகிய தசக்ரீவன் அக் காட்டில் ஆகாச மார்க்கமாகப் புஷ்பக விமானத்தில் போய்க் கொண்டிருக்கும் போது ஊழ்வினை யானது யமபாசம்போல் இழுக்க அக் காட்டில் இறங்கிக் காட்டின் வனப்புக்களைப் பார்த்துவரும் போது தபஸி லிருக்கும் வேதவதியைக் கண்ணுற்று அவளிடம் மோஹம்கொண்டு அவள் தபசைக்கலைத்து அவளிடம்பேசுவதற்காக அவள் கிட்ட நெருங்கிக் கர்ச்சித்து, நீ யார் பெண்ணே! இக்காட்டில் தனியே தவ மியற்றி யவ்வனத்தை வீணுக்குகிருய் ? சீக்கிரம் சொல், என்று கேட்டான். வேதவதியானவள் கண் விழித்துப் பார்த்து, ஏது இவ்விடம் புருஷசஞ்சார மில்லாத தென்றல்லவோ தபசுக்கு இவ்விடம் யோக்கியம் என்று நினைத்து வந்தேன். இவ்வி டத்திலும் புருஷசஞ்சாரமிருக்கிறதுபோலிருக்கிறது. இருக்கட்டும், எல்லாவற்றிற்கும் வந்திருக்கும் புமானின் எண்ணத்தை அறிய அவ னுக்கு விடை யளிப்போமென்று மனசைத்திடப்படுத்திக் கொண்டு அரசே! நான் ரிஷி புத்திரி. என் பெயர் வேதவதி. இவ் வுலகிலுள்ள மானிடர் வதனத்தில் இச்சையை நீக்கிப் பரந்தாமனும், வைகுண்ட வாசனும், க்ஷீராப்தி சயனனுமான மஹா விஷ்ணுவை விவாஹம் செய்து கொள்ள விருப்பம் கொண்டு விஷ்ணுவை உத்தேசித்துத் தவம் செய்து கொண்டிருக்கிறேன். இது தான் என் விருத்தாந்தம் என்று சொன்னுள்.

ராவணன் சிரித்துக் கொண்டு, பலே பேஷ், நல்ல காரியம் செய்தாய், ஆமையாயும், பன்றியாயும், மீனுயும், சிங்கமாயும், குள்ள ஞயும் இன்னும் பலவிதமான குறைவான ஜன்மத்தை யுடைய இவ் விழிவான வனையா போய்க் கலியாணம் செய்துகொள்ள வேண்டும்! வேண்டாம் வேண்டாம்! பெண்ணே, நான் சொல் வதைக் கேள். நானே புலஸ்திய பிர்மாவின் பேரன், விச்சிரவ பிர் மாவின் புத்திரன். ராவணன் என்று பெயருடையவன், மஹா பலிஷ் டன். திரி லோகாதிபதி. கைலாச பர்வதத்தைப் பேர்த்து எடுத்துக் கைலாசபதியினுல் இலங் கே ஸ்வரன் யென்ற பெயரும் அழியாத ஆயுளும், பல வரங்களும் பெற்றிருக்கிறேன். எனக்குச் சமத்துவ மான பெயர்கள் இவ்வுலகி லில்லை. கரும்பிருக்க வேம்பை அடையக் கஷ்டப்படுவா ருண்டோ என்று சொன்னுன்.

வேதவதி.—அடே தூர்த்தா! உன் எண்ணத்தைத் தெரிந்து கொண்டேன். உன் கியாதி எல்லாம் நான் அறிந்ததே. கைலாச பர்வதத்தை எடுக்கப்போய் அவ்வடிவாரத்தில் நீ அகப்பட்டுத்தவித்து நாரதர் உதவியால் சாம கானத்தினுல் கைலாச பதியைத் திருப்தி செய்து வைத்துக் கைலாசபதியின் கிருபையால் நீ உயிர் தப்பி வந்தது உன் முன்னோர்கள் செய்த பாக்கிய மல்லவோ. நீ வீணாய் என் விஷயத்தில் அபராதனுக ஆகி விடாதே, பெண் பாவம் சும்மாய் விடாது. அதுவும் கற்புள்ள மங்கையர்களிடம் ஒன்றும் பலியாது. வீணைசைப் படாதே என்று பலவிதமாகச் சொல்லியும் கேளாமல் ராவணன் வேதவதியின் சிகையைத் தொட்டிழுக்க, சிகையைத் தொட்டான். உடனே வேதவதி தூர்த்தன் தொட்ட சிகையை இனி உதாவதென்று தன் கையிலிருந்த வாளினுல் அறுத்து அக்னியில் போட்டுவிட்டுத் தானும் அக்னியில் பிரவேசிக்கு முன்னிலையில் ராவணனை நோக்கி, அடே ராவணபதரே! படுபாவி! என் தவத்திற்குப் பங்கம் வருமாதலால் நீ பற்றிய கூந்தலைத் துண்டித்து விட்டேன். இனி நானும் இவ் வக்கினியில் குதித்து, சீதையாகப் பிறந்து உன் உயிரை நாசமாக்கி அத்துடன் உன் குலத்தையும் நாசமாக்கு கிறேன். இது சத்தியம், என்று சாபம் கொடுத்துவிட்டு, அக்கினியில் பிரவேசித்து ஜனக மஹாராஜன் யாகத்தில், கலப்பை கொண்டு உழுகையில் அதில் ஒரு பெட்டி காண, அதில் சீதை அவதாரம் செய்திருக்க, அவளை எடுத்து வளர்த்து வரும் காலத்தில் மஹாவிஷ்ணுவும் ராம அவதாரம் செய்து சீதையைப் பாணிக்கிரகணம் செய்து காட்டில் வசிக்கும் காலத்தில் பூர்வ சாபத்தின் பயனுக, சீதைமேல் காதல்கொண்டு ராவணன் சீதையை ராமரிடமிருந்து பிரித்து லங்கைக்கு எடுத்துப்போக அதனுல் ராமர், லக்ஷ்மணருடனும் வானரர்களின் சகாயத்துடனும் லங்கைக்குப் போய் ராவணுதிகளை வதம்செய்து திரும்பி அயோத்திக்கு வந்து பட்டம் கட்டிக்கொண்டு, 'சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன, ஹனுமத் சமேத ராமசந்திர மூர்த்தி'யாய் விளங்கி வந்தார்.

ஆகையால் கற்புள்ள ஸ்திரீகளுக்கு ஒரு நாளும் கெடுதல் ஏற்படாது. ஏற்பட்டாலும் சூரியனைக் கண்ட பனியைப் போலும், சந்திரனைக் கண்ட இருள் போலும் இருந்த விடம் தெரியாமல் போய் விடும்—சுபம். சுபம்.

# கருப்ப சாஸ்திரம்

**விலை ரூ. 1—8—0**

இதில் காலமறிந்து கலியாணஞ் செய்யுமுறையும், பருவமறிந்து சங்கமஞ் செய்யும் விபரமும், கருப்பத்திலிருந்து ஆண், பெண் ஆகிய இரண்டினுள் இன்னதென்று அறியும் உபாயமும், தம் மனோபாவனையின்படி ஆண், பெண் உற்பத்தியாக்கிக் கொள்ளுந் தன்மையும், ஸ்திரீ புருஷர் மலடாவதின் காரணமும், கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் கவனித்து நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் ஒவ்வொரு மாதமும் உண்டாகும் வியாதிகளும் அவற்றிற்குத் தக்க சிகிச்சைகளும், சுகப் பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்களும் இன்னும் அரிய பெரிய ரகசிய விஷயங்களும் அடங்கியுள்ளன.

ஆங்காங்கு படங்களுண்டு. சொற்ப பிரதிகள்தான் கைவசம். உடனே எழுதுங்கள். ஆர்டர் செய்பவர்கள் எமக்கே நேராக எழுதித் தருவித்துக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம ஸமாஜம் ஜி. டி, மதராஸ்.

வெளிவந்து விட்டது ! வெளிவந்து விட்டது !!

நீங்கள் எதிர்பார்த்த நூல் வெளியாகி விட்டது!

# மோக்ஷசாதன ரஹஸ்யம்

இந் நூலாசிரியர் ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் இரண்டாம் முறை சிறைச்சாலையிலிருந்து 1922-ல் விடுதலை யடைந்ததும் இந்நூலை எழுதினார். இந்நூலில் கர்மயோகத்தில் 168 விஷயங்களும், பக்தியோகத்தில் 148 விஷயங்களும், ஹடயோகத்தில் 190 விஷயங்களும், ராஜயோகத்தில் 67 விஷயங்களும் ஞானயோகத்தில் 165 விஷயங்களுமாகப் பிரித்து எளிய வசன நடையில் எழுதியிருக்கிறார். இதுகாறும் தமிழ் உலகில் வெளிவந்ததில்லை.

நூலாசிரியர் படத்துடன் கலிகோபயிண்டு ரூ 4—0—0
வி. பி. சார்ஜ் வேறு.

சென்னையில் புஸ்தகங்களுக்கு நம்பிக்கையான இடம்

வாஸன் புத்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, ஜி. டி. மதராஸ்.

புதிய நாவல்கள் ! புதிய நாவல்கள் !!

# சிறுவிரல் மர்மம்

## விலை ரூபா 1—4—0

புதியதாய் வெளிவந்தது. வரகவி சுப்பிரமணிய பாரதியார் இதன் ஆசிரியர். இவருடைய நாவல்களைப்பற்றி நாம் ஒன்றுமே கூற வேண்டியதில்லையாயினும் பொதுஜன அபிப்பிராயத்தை மட்டிலும் உங்களுக்குத் தெரிவிக்கிறோம். இந்த நாவலைப்படித்த ஒருவர் "நானும் எத்தனையோ கதைகளைப் படித்தேன். ஆனால் இதைப்போன்ற அழகான கவர்ச்சி செய்யும் கதையை நான் படித்ததேயில்லை. என்னுடைய சிநேகிதர்களையும் இந்தக் கதையைப் படிக்கும்படி நான் தூண்டினேன். எல்லோரும் படித்து ஆனந்தமடைந்தோம்" என்று எழுதுகிறார். அன்பர்காள்! இந்த அபூர்வமான நாவலைப்பற்றி எம்மிடம் நூற்றுக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன. நீங்களும் இதைவாங்கிப் படித்து உங்களுடைய அபிப்பிராயத்தை யெங்களுக்குத் தெரியப்படுத்துவீர்களென்று நம்புகிறோம்.

# கலியின் கோலாகலம்

## விலை ரூபா 1—0—0

இது ஒரு சகோதரியால் எழுதப்பட்டதினாலேயே இதன் அருமை பெருமையைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. தெள்ளிய தமிழ் நடையைக்கொண்டு, மனதை ரமிக்கச் செய்யும் நாவல் இதுதான். கதையின் சில பாகங்கள் ஓயாமல் சிரிப்பையுண்டாக்கும் விதமாய் எழுதப்பட்டிருக்கின்றன. கதைப் போக்கு படிப்பதற்கு வெகு இன்பகரமாயிருக்கும். இந்தப் புஸ்தகம் ஏராளமாய் விற்பனை யாகிறது. "கலியின் கோலாகலம்" என்ற பெயரைப் பார்த்தவுடனேயே இந்தப் புஸ்கத்திலடங்கியுள்ள விஷயங்கள் எப்படியிருக்கு மென்பதை நீங்கள் யூகித்து அறிந்து கொள்ளலாம். மிஞ்சியுள்ள பிரதிகள் கொஞ்சமே. ஆகையால் உடனே முந்துங்கள்.

வாஸன் புத்தகசாலை,

97, அண்ணாபிள்ளைத் தெரு, ஜி. டி. மதராஸ்.

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி

640–பக்கமுள்ள அழகிய முழுகாலிகோ பைண்டுள்ளது

பாரதக் கதைகளும் சேர்ந்தது. துரோபதை சுயம்வர
ஆப்டோன் படத்துடன் கூடியது.

இதற்குமுன் பல ஆங்கில போதினிகள் வெளி வந்திருப்பினும்
அவை இதற்கு இணையாகா. விலை ரூபா **2**–தான்

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு **30-4-26** வரை ரூபா. **1-8-0.**

இந்நூல், ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்குத் தமிழினாலேயே இலகுவாகப் போதிக்கும் அரிய போதனா முறைகள் அடங்கியது. ஆங்கிலம் பயிலும் முறைகள் இதில் அதி அற்புதமாக அமைக்கப்பட் டிருக்கின்றன; இங்கிலீஷ் வார்த்தைகளைத் தமிழிலும் இங்கிலீஷிலும் அமைத்து ஆங்கில உச்சரிப்புக்கள் சரியாய் வரும்படி தமிழ் எழுத்துக்களுக்குக் குறிகள் இடப்பட்டிருக்கின்றன. அதனால் தமிழ் எழுத்துக்களில் அமைந்த இங்கிலீஷ் வார்த்தைகளை சப்ததோஷமின்றிச் சரியாக உச்சரிக்கலாம். இந்த அரிய முறை வேறெந்தப் புத்தகத்திலும் அமையவில்லை. இதன் உதவிகொண்டு, ஓர் உபாத்தியாயரைத் தேடி அலையாமலும், மிக்க பணச் செலவின்றியும், நெடுந்தூரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்குப் போகாமலும் எவரும் தங்கள் தங்கள் இருப்பிடங்களில் இருந்தபடியே இங்கிலீஷ் பாஷையை எளிதில் கற்றுக்கொள்ளலாம். பள்ளிக் கூடங்களிற் சேர்ந்து ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவிட்டுப் பத்து வருடங்கள்வரை ஆங்கிலம் பயிலுவதால் எவ்வளவு இங்கிலீஷ் தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு ஆங்கிலஞானம் **40**-நாட்களில் இதனால் உண்டாய்விடும். கிராம உத்தியோகஸ்தர்கள், துரைமார்களிடம் வேலை செய்யும் பட்லர், மேட்டி, பாய், கூக், ஆயாள், கங்காணிகள் போலீஸ் சிப்பாய்கள், ரெயில்வே போர்ட்டர்கள், கோர்ட் சேவகர்கள், முதலியவர்களுக்கும் இங்கிலீஷ் தெரியாத மற்ற ஆண், பெண், சிறுவர், சிறுமியர் முதலிய எல்லோருக்குமே இது இங்கிலீஷ் ஞானத்தை யுண்டாக்கிச் சீரும் சிறப்பும் தரும்.

“ ஆனந்த போதினி ” ஆபீஸ்.

நெ. 6, வெங்கடேச மேஸ்திரிவீதி, மதராஸ்.

# ஆனந்த மேகன்

அல்லது

## காதலாற் கொலை

படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும் நாவல் இது தான். கதையின் ஆரம்பத்திலிருந்தே நிகழும் ஒவ்வொரு அபூர்வ சம்பவமும் மனதைக் கவர்ந்து மேன்மேலும் படிக்கத் தூண்டுகிறது. இதில் மாய மனிதன் என்ற ஒருவன் பல வேஷங்கள் பூண்டு செய்யும் அபாரமான செய்கைகள் உங்களைப் பிரமிக்கும்படிச் செய்யும். இன்னும் துப்பறிவோனின் சூழ்ச்சிகளைப் பற்றியும் இதைப்படித்த பலர் உருக்கமாகப் புகழ்ந்து பேசுகின்றனர். படித்தவுடன் திருட்டுப் பிரமிக்கும் படியான நாவல்கள் சிலவே. அதனுள் இதுவே முதன்மை யான தென்று இதைப்படித்த எல்லோரும் ஒருமிக்க அபிப் பிராயப் படுகிறார்கள். ஒரு 300 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம். உடனே ஒரு பிரதிக்கு ஆர்டர் கொடுத்து படித்து ஆனந்தமடையுங்கள் : விலை ரூபா 1—8—0

வாஸன் புஸ்தகசாலை,

97, அண்ணாபிள்ளை தெரு, ஜி. டி, மதராஸ்.

---

வந்து விட்டது

புதிய சரக்கு ! புதிய கடியாரம் !!

## "டிக்டாக்"

## வால்கிளாக்

இப்பொழுதுதான் வந்தது.

மிக்க அழகுள்ளது.

காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது.

முந்துங்கள்! முந்துங்கள்! முந்துங்கள்!!

சுவற்றில் மாட்டக்கூடியது.

விலை 1-க்கு ரூ. 3 தான்

தபால் செலவு வேறு.

விலாசம்:—**FANCY WATCH HOUSE**

S. I. BRAHMA SAMAJAM

**G. T. Madras.**

ஐஸ்வரியம் வேண்டுமா ?                                    இனம் !

" ஐஸ்வரிய இரகசியம் " என்னும் புத்தகம் முற்றிலும் இனம்! உடனே எழுதுங்கள். இப்புத்தகம் ஐஸ்வரியம் அடையும் வழிகளைத் தெளிவாய்க் காட்டுகிறது. ஒரு கார்டு மாத்திரம் எழுதுங்கள். மறந்துவிட வேண்டாம்.

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
20, தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி.

---

இனம் !          இனம் ! !          இனம் !!!

## " தொழிலாசிரியன் "

ஏழைகள் பணக்காரராவதற்குத் தகுந்த தொழில் முறைகளையும், புதிய யோஜனைகளையும் போதிக்கும் ஓர் மாதாந்திர தமிழ் சஞ்சிகை !

இதன் வருட சந்தா ரூ. 2 தான்.
வெளிநாடுகளுக்கு ரூ. 3—0—0 மாதிரி காப்பி இனம் !
ஒரு வருஷத்திற்கு பத்திரிகை இனமாக அனுப்பக்கூடும்.
விபரத்திற்கு எழுதுங்கள் !

" தொழிலாசிரியன் " ஆபீஸ், (டிபாட் 10) சிவகெங்கை.
தென் இந்தியா

---

சிங்கார நாவல் !                    தங்கவிசிறி நாவல் !!
ராமானுஜலு கற்பனை !          ராமுலு கம்பெனி விற்பனை !!
காணும்போதே காக்ஷி !          வேணுமென்பார் மாக்ஷி !!

# ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி

3 ஆப்டோன் படங்கள். 350 பக்கங்கள்.

## விலை ரூபா ஒன்று.

எம். எஸ். ராமுலு கம்பெனி,
ராயபுரம், மதராஸ்.

பவுன் நிறம் வாய்ந்த

## பட்டணம் பொடி.

இப் பூவுலகெங்கெனும் புகழ் பெற்றோங்கியதும் தங்கமெடல், வெள்ளி மெடல், பரிசு பெற்றதும் ஸ்பெஷல் பொடிஎன மகுடம் புனைந்ததும்,குணம் மணம், நிறம், வடை, காரம் இவ்வைந்தும் ஒருங்கே அமயப்பெற்றதும், தினசரி நற்சாக்ஷிப் பத்திரங்களால் கொண்டாடக் கூடியதுமான எமது பொடியை ஓர்முறை உபயோகித்து ஆனந்த மடையுங்கள். உங்கள் சிரசிலுள்ள துர் வியாதிகளை போக்கிக்கொள்ள விரும்புவீர்களாயின் இன்றே K. S. சுகந்த மூக்குத் தூளின் இருப்பிடத்தைக் கவனியுங்கள்.

K. சுல்தான் முஹையதீன் சாயபு
பட்டணம் பொடி தொழிற்சாலை,
தபாற்பெட்டி 260 நெ. 8 அப்பு மேஸ்திரி வீதி, சென்னை.

இனம் ! முந்துங்கள் இனம் !!



இதில் கண்ட எந்த கெடியாரம் வாங்கினபோதிலும் கெடியாரம் 1-க்கு மூன்று ரூபா விலையுள்ள டேபில் டைம்பீஸ் கெடியாரம ஒன்று இனமாய்க் கொடுக்கப்படும். நெ. 1. தங்கமுலாம் பூசிய 8-மூலை, பீபாய் வடிவம் அல்லது டோனியோ ஷேப், இரவில் மணிபார்க்க ரேடியம் டைல் உள்ள கையில்கட்டும் ரிஸ்லெட் கெடியாரம் 1-க்கு ரூ. 7—8—0. நெ. 2. ஷி பளபளப்பான தங்கடைல் உள்ள ரவுண்டு ஷேப் கீல் வளையமுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 1-க்கு ரூ. 7-12-0. நெ. 3. தங்கமுலாம் பூசிய ரவுண்டு ஷேப் ரிஸ்லெட் கெடியாரம் 1-க்கு ரூ. 6-8-0. நெ. 4. பொன் முலாம் லேடி 'பாக்கெட் கெடியாரம் கையில் கட்டவும் ஜேபியில் போடவும் கூடியது 1-க்கு ரூ. 6-2-0. நெ. 5. ரேடியம் டைல் உள்ள நிக்கல் பாக்கெட் கெடியாரம் 1-க்கு ரூபா 5—8—0. நெ. 6. ரேடியம் இல்லாத சாதா பாக்கெட் கெடியாரம் 1-க்கு விலை ரூபா 5—0—0. ஒவ்வொரு கெடியாரத்திற்கும் டேபில் டைம்பீஸ் ஒன்று இனம் கொடுக்கப்படும்.

பெரிய கேட்லாக் வேண்டுவோர்கள் எழுதவும்.

யூனிவர்சல் வாட்ச் கம்பெனி, 47, 48, ராமகோடி பில்டிங்,
ராட்டன் பஜார், மதராஸ்.

## ஹஸ்த லக்ஷண சாஸ்திரம்.

விளக்கமான அனேக படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசன நூலறிவினால், ஞான திருஷ்டி, விவாகலாபம், ஆயுள், குணம், அதிர்ஷ்டம், அறிவு, சந்தானம், வலி, அபாயம், தயை, வியாதி, கண்டம், வஞ்சகம், பக்தி, ஐசுவரியம், சக்தி, சிற்றின்பம், புத்தி, பேரின்பம், வியாச்சியம், காரிய சித்தி, சௌக்கியம், முதலியன அறியலாம். விலை ரூபா 2—0—0.

V. S. குமாரசுவாமி முதலியார் & ஸன்,

(7) வேலூர் (North Arcot.)

---

## மணவாழ்க்கையின் மர்மங்கள்.

இந்நூல் உங்களுக்கு இல்லாமல் முடியாது !

இஃது தகுந்த ஆயுர்வேத, ஆங்கில, மேற்கொள்கைகளைக் கொண்டு, மேலோரின் குடும்ப வாழ்க்கையில் சாஸ்திரோக்தம் போல் எழுதப்பட் டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். ஏராளமான பிரதிகள் விலையாய்விட்டன. இன்றே எழுதுங்கள். முன் வெளியிடப் பட்ட "கோக்கோகக் கோலம்" என்னும் நூலின் விரிவு நூலே இஃது என்பது நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விலை ரூபா 2—4—0 தபால் செலவு 0—6—0.

துளசிரும் புக் டிபோ,

33, தையப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ் (ல.)

---

24 தங்க மெடல்கள் பரிசுபெற்ற

மதராஸ் N. V. ஷண்முகம் கம்பெனியார்

**பட்டணம் பொடி.**

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.

இன்றே விலை விபரத்துக் கெழுதுங்கள்.

N. V. ஷண்முகம் & கோ.,

போஸ்ட் பாக்ஸ் 555, மதராஸ்.

கேஸரியின்

# லோத்ரா.

## கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதனுபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி யென்றும் அதிசிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப விரணம், ருது சூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவி னுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப் படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3–0–0

சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10–0

**கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,**

எழும்பூர், மதராஸ்.

---

A. S.


# எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை யெடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக யின்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கை கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 ஷி டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷி சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 ஷி டஜன் 1-க்கு ரூ. 2 ஷி சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

**எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,**

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதறாஸ்.

இனம் !　　　டைம்பீஸ்　　　இனம் !!

என்றும் நேரிடாதது !

உள்ளபடி மெச்சத்தக்கது !!

(திருப்தியில்லாவிடில் பணம் திருப்பி அனுப்பப்படும்)



தற்சமயம் எமக்கு கை கெடியாரங்களும் டைம் பீஸ்களும், ஸ்விஸர்லாந்திலிருந்து ஏராளமாய் வந்திருக்கிறபடியால், தற்சமயம் எம்மிடம் உள்ள 22 காரட் ரோல்ட் கோல்ட் "பீயர்லஸ்" கை கெடியாரம் ஒன்றும் மேஜைமீதுவைக்கும் டைம்பீஸ் ஒன்றும் ஆக இரண்டும் ரூபா 7-க்கு கொடுக்கப்போகிறோம். இவை இரண்டும் சரியான மணி காட்டக்கூடியவை. நிஜமாக இந்த சம்பவம் மெச்சத்தக்கது. இவைகளின் மீது 5 வருஷம் காரண்டி அச்சிடப்பட்டிருக்கிறது. ஆகையால் இவைகள் இரண்டுக்கும் கிரையம் ரூபா 7 (எழு) தான்.

எமது விலாசம்:—

**ஸ்விஸர்லாந்து வாட்சு கம்பெனி,**

(கெடியார வியாபாரிகள்)

தபால்பெட்டி நெ. 1210, மதராஸ்.

---

வால்மீகி மஹரிஷி அருளிச்செய்த

# ஆநந்த ராமாயணம்

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு 13 அழகிய ஆப்டோன் படங்களுடன் கலிகோ தங்கில்ட் பெயருடன் விலை ரூ 6.

ஆநந்த ராமாயணம் என்னும் இந்நூல் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட ஒரு சிறந்த கிரந்தமாகும். இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்களும் வால்மீகி ராமாயணத்திலுள்ள விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. 1. ஸாரகாண்டம், 2. யாத்திரா காண்டம், 3. யாககாண்டம், 4. விலாஸகாண்டம், 5. ஜன்மகாண்டம், 6. விவாக காண்டம், 7. ராஜ்யகாண்டம், 8. மனோகர காண்டம், 9. பூர்ண காண்டம், என ஒன்பது காண்டங்கள் அடங்கியிருக்கின்றன. ஒன்பது காண்டங்களுக்கும் 109 சருக்கங்கள். 109 சருக்கங்களுக்கும் 12252 கிரந்தத் தொகைகள். இதிலுள்ள கிளைக்கதைகளைப் பாகவதர்கள் காலக்ஷேபம் செய்யுங் காலங்களில் உபமானமாக எடுத்துக்காட்டி வருகிறார்கள். இலட்சுமணசக்தி, ஸ்ரீராம ரக்ஷையின் மகிமை, குசலவர்களின் பராக்கிரமம், இவைபோல்வன விவரமாய்க் காணப்படும்.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

பார்க் டவுன், (P. O) சென்னை.

உண்மை ! ஜோதிஷம் !! உண்மை !!!

# ஸ்ரீ ஷண்முக உபாசியினல் சொல்லப்படுகிறது.

அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

நியாயமான 5 கேள்விகளுக்கு சார்ஜ் ரூ 1.
பின் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 4.

ஜாதகத்திற்கு ஒரு வருஷத்திய பலன் எழுதி யனுப்ப சார்ஜ் ரூ 5. ஜாதகத்தின் நகலோ, கடிதம் எழுதும் நேரமோ, அல்லது முழுப் பெயரையோ தெரிவிக்கவும்.

சகல காரியங்களிலும் ஜெயம் பெறவும், செல்வமடையவும், ஸ்ரீ ஷண்முகர் ரக்ஷாபந்தனம் தரித்துக் கொள்ளவும். சார்ஜ் ரூ 4.

கடன்களை நீக்கி, லக்ஷ்மி கடாக்ஷத்தை அளித்து, குடும்ப நிலைமையையும், கௌரவத்தைக் கொடுக்கவும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ரக்ஷாபந்தனத்தை யணியவும். சார்ஜ் ரூ 10.

தபால், பாக்கிங் சார்ஜ் வேறு. வெளி நாட்டிலுள்ளோர், ரூ 2. சேர்த்து, முன்னதாகவே பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் அனுப்பவேண்டும்.

பிரத்தியேக ரக்ஷாபந்தனங்களுக்கு எழுதி விவரமறிக.

விலாசம் :—

புரொப்ரைட்டர்,

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஜோதிஷ நிலையம்,

விழுப்புரம், தென் இந்தியா.

# லோகோபகாரி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகை. முப்பத் திரண்டாவ தாண்டு இப்பொழுது நடக்கிறது. பரலி சு. நெல்லையப்ப பிள்ளை இதன் ஆசிரியர். தாங்கள் இதுவரை சந்தாதாராகா விட்டால் உடனே எழுதுங்கள்.

வருட சந்தா ரூபா 4.

மாதிரிப் பிரதி இனாம்.

'லோகோபகாரி'

பத்திரிகாலயம்,

கோமளேசன் பேட்டை,

சென்னை.

ஒவ்வொரு
குடும்பத்திற்கும்
இன்றியமையாத
பொக்கிஷம்.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

மின்சார ரசம்
கையிலிருந்து
விட்டால் வேறு
மருந்தே
தேவை இராது.

# மின்சார ரசம்

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம்போன்றதென உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. மின்சார ரசம் செய்வதில் உபயோகப் படுத்தப் பட்டுள்ள சரக்குகளுக்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. இதில் பாஷாண சம்பந்தமான சரக்குகள் கிடையாது. பத்தியமில்லை. அனுபானமில்லை. உள்ளுக்கும் மேலுக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

சகலவித ஜுரங்கள், தலைவலி, ஜலதோஷம், இருமல், அஜீரணம், புளியேப்பம், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, பல்வலி, பல்லரணை, வாய் நாற்றம், கைகால்பிடிப்பு, வாய்வு தொந்தரவுகள், வாத ரோகங்கள், காலரா, பிளேக், ஜன்னி, ஸ்திரீ ரோகங்கள் குழந்தை வியாதிகள் இவைகளுக்கு மின்சார ரசம் கைகண்ட மருந்தென்பது தினந்தோறும் ஆயிரக் கணக்காய் தேசமெங்கும் உபயோகித்து வருபவர்களின் அனுபவமாகும். உண்மை விளங்க ஒரே முறை பரீக்ஷியுங்கள்.

இன்றைக்கே எழுதுங்கள்! கேட்லாக் இனாம் !!

புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எச்சரிக்கை : அசல் மின்சார ரசம் ஒன்றுக்கே மேற்கண்ட டிரேட்மார்க் உள்ளது.

விலாசம் :—

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட்,

சேலம் (S. I.)

F. M. S. க்கும் S. S. க்கும் சோல் ஏஜண்டுகள்,

மெஸர்ஸ் :

ஆர். இ. முகம்மது காசீம் & கோ,

கிளாங், பினாங், சிங்கப்பூர்.



தமிழ்நாடு ஆ...
சென்னை 600 008
31035

## கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகல முள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நெ. விலை ரூ. | 11 | முதல் | 15 | வரை |
| 2 | ,, ,, | 10 | ,, | 11 | ,, |
| 3 | ,, ,, | 8½ | ,, | 10 | ,, |

### கம்பளிச் சட்டை

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. மிகவும் அழகாயிருக்கும் குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்துகொண்டால் நடுக்கம், சீதளம் அண்டாது. தோட்டங்களி விருப்பவர்களுக்கு முக்கிய அவசியமானது.

கிரே கலர் சட்டை 1-க்கு ரூ. 4-8-0

உயர்ந்த வெள்ளை ,, ரூ. 12 முதல் 18 வரை.

### TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில்போர்த்துக்கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

### கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ 1, 1½.

உயர்ந்தது ரூ. 3½ முதல் 5 வரை.

### LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 3.

### மடிதாவளி

இது அசல் கம்பளியால் செய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 முழம் | 24 | இஞ்சு | அக. ரூ. | 2 | | 10 முழம் | 40 | இஞ்சு | அக. ரூ. | 7 |
| 6 ,, | 24 | ,, | ,, | 2½ | | 16 ,, | 40 | ,, | ,, | 12 |
| 7 ,, | 29 | ,, | ,, | 3 | | 18 ,, | 40 | ,, | ,, | 14 |
| 8 ,, | 40 | ,, | ,, | 5½ | | | | | | |

## கே. எஸ். முத்தையா & கோ.

சில்க் ஹவுஸ் — — காசி.

குளிர்! குளிர்!! குளிர்!!!

## தேகாரோக்யத்தை கவனியுங்கள்.

### சுதேசி கம்பளி போர்வை

அசல் கம்பளி கரையில்லாதது. எல்லா கலர்களிலும் கிடைக்கும்

நெ. 1. 6மு × 3 வீ விலை ரூ. 10.
நெ. 2. ,, ,, 7.
நெ. 3. ,, ,, 6.

### மேகவர்ணப் போர்வை.

ஜெர்மனியில்செய்த நைஸான துணி. பலவிதமான கலர்களில் கிடைக்கும். ஒரே மாதந்தான் இதன் விலை.

நெ. 1. 6மு × 3 வீ விலை ரூ. 14.
நெ. 2. ,, ,, 10

### பாரீஸ் உல்லன் சால்வை.

அசல் உல்லன், அழகான பட்டினல் பூவேலைகள் செய்யப்பட்டது. புதுமாதிரியான ரகம் எல்லாக் கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1. 6 மு × 3வீ விலை ரூ. 16.
நெ. 2. ,, ,, 14.

### உல்லன் மப்ளர்.

வாடைகளை போக்கடிக்கக் கூடியது. கழுத்தில் கட்டி காதை மறைத்துக் கொள்வது. காக்கி வெள்ளை முதலிய கலர்கள்.

5 மு × 7 இஞ்சு விலை ரூ. 2-8-0.

### ஜெர்மன் கம்பிக்கரை போர்வை.

பலவிதமான கலர்களில் கிடைக்கும். அழகான கம்பிக் கரை.

6 மு × 3 வீ. விலை ரூ. 10, 12.

### உல்லன் ரக் (Rug)

உயர்ந்த கம்பளியால் செய்யப்பட்டது. நல்ல குளிரில் போர்த்துக் கொள்ள உதவும். கருப்பு, புளூ முதலிய கலர்கள்.

6மு × 3வீ. விலை ரூ. 12,14,18.

## கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99

சென்னை.


Printed by P. R. Rama Iyar & Co., Madras and Published by K. S. Sundarar.